Registered No. M 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரிஹு புரட்டாசிமீ 12உ 27—9—1948 ஹிஜ்ரி 1367 துல்கஃதாமீ 23உ திங்கட்கிழமை. } இதழ் 35

## — காஷ்மீர் போரின் லட்சியமென்ன? —

• • •

காஷ்மீரில் கவலையளிக்கத் தக்க நிலைமை இருந்து வருகிறது. இந்தியா பாகிஸ்தான் நாடுகளிடையே நீண்ட நாள்வரை யுத்தம் நடப்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் இந்திய மஹாஜனங்களிடையே பரபரப்பு இல்லை; கவலை யில்லை. சமாதான காலத்தைப்போலவே நிம்மதியுடன் அலட்சியமாய் காணப்படுகின்றனர். நாடு தாக்கப்பட்டிருக்கையில் எந்த ஒரு நாட்டு மக்களும் இவ்வளவு அசிரத்தையுடனிருந்திருக்க முடியாது.

இதற்கு சர்க்காரின் போக்கும் ஓரளவு காரணமாகும். ஒரு அண்டை நாட்டின் நியாயமற்ற தாக்குதலை எதிர்த்து முறியடிப்பதில் முனைந்திருக்கையில் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்த இந்தியா போதுமான பிரசாரம் செய்யவில்லை.

காஷ்மீரில் நடப்பது சாதாரண தாக்குதல்களல்ல. பயங்கரப்போர்; கோரயுத்தம்; இருதரப்பிலும் லட்சக் கணக்கில் சிப்பாய்கள் ஈடுபட்டிருக்கின்றனர். எதிரி 25 பவுண்டு குண்டுகளை சுடுகிறான். நம் விமானங்களை விமான எதிர்ப்பு பீரங்கிகள் தாக்குகின்றன. 500 மைல் வரை விஸ்தரித்துவிட்ட போர் முனையில் நம் வாலிபர்கள் உயிரை அர்ப்பணிக்கின்றனர். நம்முடைய முதல் தரமான சில தளபதிகளும் இரையாகிவிட்டனர். தினம் பத்து லட்ச ரூபாய் வரை சில விடப்படுகிறது.

இந்நிலையில் "யுத்தம் எதற்காக? அதன் லட்சியங்கள் யாவை? இந்தியாவுக்கு அதனால் ஏற்படக் கூடிய லாபமென்ன? நம் வாலிபர்கள் காஷ்மீர் மண் மீது ஏன் ரத்தம் சிந்துகின்றனர்? உணவுப் பொருள், தளவாட வாகன்களை ஆயிரக் கணக்கில் அனுப்பி நாம் அடையப் போவதென்ன?" வென்று தங்களுடைய அரசாங்கத்தைக் கேட்க ஒவ்வொரு இந்தியனுக்கும் உரிமையுண்டு. உண்மையாகவே இன்று இந்தியர்களின் உள்ளத்தில் உதிக்கும் கேள்விகளும் இவைதான்.

காஷ்மீரில் போர் ஆரம்பித்து ஒரு வருஷம் ஆகப் போகிறது முடிவடைவதாகத் தெரியவில்லை. கடைசி வரை போராடியே தீருவதென இரு தரப்பிலும் தீர்மானித்திருப்பதாகவே தோன்றுகிறது.

காஷ்மீரிலிருந்து கடைசி படையெடுப்பாளனையும் விரட்டியடிக்காதவரை விடப்போவதில்லை யென்று பண்டித நேரு உறுதியுடனிருக்கிறார்.

எவ்விதத்திலும் காஷ்மீரை ஆக்கிரமிப்பதென்று பாகிஸ்தானும் தீர்மானித்திருக்கிறது. காஷ்மீரில் தன் துருப்புகள் போரில் ஈடுபட்டிருப்பதாக பஹிரங்கமாய் ஒப்புக்கொண்டதிலிருந்து இந்தியா மீது பாகிஸ்தான் நேரடியாக போர் தொடுத்திருக்கிறது.

இந்திய பாதுகாப்புக்கும் சுதந்திரத்துக்கும் அவசியமாயிருப்பதைப் போலவே காஷ்மீர் பாகிஸ்தானுக்கும் ஜீவமரணப் பிரச்னையாகும். ஆகையால் முன்கூட்டி திட்டமிட்டு தாக்கியிருக்கும் பாகிஸ்தான் சகல சாதனங்களையும் உபயோகிக்காமலிருக்காது. ஒருகால் அதற்கு வெளியுதவியும் கிடைக்கலாம். எனவே நாமும் மக்களை போருக்கு தயார் செய்தாக வேண்டும்.

ஜனசக்தியை தட்டியெழுப்புவதற்கு யுத்தத்தின் உயரிய லட்சியத்தை மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். இல்லையேல் யுத்த கால கஷ்டங்களால் சலிப்படைந்து நாளாவட்டத்தில் மக்கள் யுத்தத்தை நிறுத்தும்படியும் கோரலாம். அந்நிலையில் மக்கள்

கோரிக்கைக்கு இணங்க மறுப்பவர்கள் சர்க்காரிலிருந்து தாங்களாகவே வெளியேறவேண்டியிருக்கும். மக்கள் இஷ்டத்துக்கு மாறாக நடந்த சேம்பர்லீனை மறந்துவிடுவதற்கில்லை.

காஷ்மீரில் மாதமொன்றுக்கு ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் செலவாகின்றது. இந்த பெருந்தொகை எங்கிருந்து வருமென்பதுதான் கேள்வி. பணத்தையாவது வரி விதிப்பதன் மூலம் வசூலித்து விடலாம். ஆனால் ஆள் பலமும் யுத்தத்துக்கு தேவையான பொருள்களும் எப்படி திரட்டமுடியும்? யுத்தத்தில் வெற்றியடைவதால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்படக்கூடிய நன்மைகளை எடுத்துக்காட்டி மக்களுக்குள் போர் ஆவேசமும் உணர்ச்சியும் தூண்டப்படாதவரை அது சாத்தியமேயில்லை.

மக்கள் யுத்தம்; அரசர்கள் அல்லது அரசாங்கங்கள் யுத்தம்; என இருவகை யுத்தமுண்டு. காஷ்மீரில் நடப்பது மக்கள் யுத்தமா? அல்லது மத்திய சர்க்கார் மந்திரிகள், இந்திய ராணுவத்தினர்கள் யுத்தமா? 'மக்கள் யுத்தம்' என்று பொதுஜனங்களுக்கு உணர்த்த இதுவரை அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? வென்று மத்திய அரசாங்கத்தை கேட்காமலிருக்க முடியாது.

காஷ்மீரில் நீடித்து யுத்தம் நடக்கலாம். அதனால் அத்தியாவசிய தேவைப் பொருள்களின் பஞ்சம், அகவிலைகள் ஏற்றம் போன்ற பல கஷ்டங்கள் மக்களை எதிர் நோக்கவும் கூடும். எத்தனை கஷ்டங்கள் வரினும் அவற்றை சிரித்த முகத்துடன் சகித்து உறுதியுடனிருப்பதற்கு யுத்தத்தின் லட்சியமும், காஷ்மீரில் எதிரி வெற்றியடைந்துவிட்டால் இந்திய பொது வாழ்க்கைக்கு ஏற்படக்கூடிய அபாயமும் மக்களுக்கு தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டியதவசியம். யுத்த கால கஷ்டங்களுக்கு பிரசாரமே சரியான பரிகாரம். காஷ்மீர் யுத்தத்தை மக்கள் 'நம் யுத்தம்' என்று நினைக்கும்படி இந்திய சர்க்கார் செய்த பிரசாரம் என்ன?

காஷ்மீரில் நாம் தோல்வியடைந்தால் (ஆண்டவன் அவ்விதம் செய்யாமலிருப்பாராக!) வருங்காலம் நம்மைக் குறித்து என்ன தீர்ப்பளிக்கும்? சரித்திர ஆசிரியன் என்ன சொல்லுவான்! எதிரிகளைவிட நான்கு மடங்கு ஜன சக்தியும் சாதனங்களும் கொண்டிருந்ததொரு மாபெரும் உபகண்டம் ஒரு சுண்டைக்காய் நாட்டிடம் தோற்றுவிட்டது' என்று கேலி செய்யமாட்டானா?

தங்கள் போராட்டத்தின் புனிதத்தன்மை, லட்சியத்தின் உயர்ச்சி தெரிந்திருந்தால் மட்டுமே மக்களுக்குள் யுத்த ஆவேசமும சகிப்புத்தன்மையும் உண்டாக முடியும்.

'நாடு நியாயமற்ற முறையில் தாக்கப்பட்டிருக்கிறது' என்ற உணர்ச்சியே சென்ற மஹாயுத்தத்தில் ரஷ்யர்களுக்குள் அபாரமான எதிர்ப்பு சக்தியை உண்டாக்கி யிருந்தது.

50 சத விகிதம் வீடுகள் குட்டிச் சுவர்களாகி ஐரோப்பா முழுவதையும் பாஸிஸம் ஆக்ரமித்துக் கொண்டு, ஜனநாயகம் பிரிட்டிஷ் தீவுகளுக்குள் அடைபட்டுக் கிடந்தபோதும் பிரிட்டிஷார் சோர்வடையவில்லை ஆயுதத்தை வைத்துவிடவில்லை. ஏன்? போராட்டத்தின் ஜனநாயகத் தன்மையும் நியாயமும் அவர்களுக்கு உணர்த்தப்பட்டிருந்தது முடிவில் ஜனநாயக லட்சியம் வெற்றியடையுமென்று அவர்கள் நம்பியிருந்தனர். யுத்தத்தின் லட்சியங்களை மக்களிடையே பிரசாரம் செய்ய கோடிக் கணக்கில் மேல் நாடுகள் செலவிடுவதற்கு அதுதான் காரணம்.

## பலதரப்பட்ட அபிப்பிராயங்கள்

காஷ்மீர் போர் பற்றி பொதுவாக ஹிந்துக்களிடையே கீழ்வரும் மூன்றுவித அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

1. பைத்தியக்காரத்தனமான ஒரு செய்கையே காஷ்மீர் யுத்தம். பல கோடி ரூபாய் வீணாக்கப்படுகிறது. கடைசியில் காஷ்மீரிகள் பாகிஸ்தானிலேயே சேரப் போகின்றனர். எல்லைப்புரம், பலுஜிஸ்தானம், சிந்து, மேற்கு பஞ்சாப், வங்காளத்தையே காஷ்மீரும் பின்பற்றும். காங்கிரஸுக்கு மெஜாரிடியாயிருந்த எல்லைப்புரமும் பாகிஸ்தானுடன் சேரவே தீர்மானித்தது. முஸ்லிம்களை நம்ப முடியாது. வீணாக செலவு செய்வதில் பிரயோஜனமில்லை.

2. இந்தியாவின் பாதுகாப்புக்கும் தற்காப்புக்கும் காஷ்மீர் அவசியம். காஷ்மீர் பாகிஸ்தான் கைக்குப் போன பிறகு கிழக்குப்பஞ்சாப், டில்லியை நோக்கி நீட்டிய ஒரு பீரங்கியாகவே இருந்துவரும். ஆகையால் காஷ்மீர் அன்னியர்கள் கைக்குப் போவதை இந்தியா சகித்துக் கொண்டிருக்க முடியாது.

3. பாகிஸ்தானிடம் பழி தீர்த்துக்கொள்ள யுத்தம் அவசியம். காஷ்மீரிலாயினும் வேறு எங்காயினும் யுத்தம் நடக்கவேண்டும். அப்பொழுதுதான் பாகிஸ்தான் ராணுவ பலத்தை ஒடுக்கமுடியும். பாகிஸ்தானே இந்தியாவின் முதல் எதிரி. இந்தியாவை அழிக்கவே பாகிஸ்தான் பார்க்கிறது.

மேற்கூறிய மூன்று வித அபிப்பிராயங்கொண்டவர்களைத் தவிர இன்னொரு வகுப்புவாத கோஷ்டியும் உண்டு. அவர்களுக்கு காஷ்மீர் பற்றி கிஞ்சித்தும் கவலை கிடையாது. முஸ்லிம்களை பரிபூரண மெஜாரிடி

யாகக் கொண்ட காஷ்மீர் இந்தியாவுடன் சேர்வதால் ஹிந்து ராஜ்ய கோஷம் ஓய்ந்துவிடுமே என்ற கவலையும் ஜனநாயகம் வலுவடைந்துவிடுமே என்ற பயமும் அவர்களை வாட்டுகின்றது.

காஷ்மீர் போர் குறித்து ஹிந்து சகோதரர்களிடையே பொதுவாக நிலவும் அபிப்பிராயங்கள் இவைதான்.

## காஷ்மீரில் பாகிஸ்தான் லட்சியமென்ன?

பாகிஸ்தான் காஷ்மீரில் ஏன் போராடுகிறது? அதன் லட்சியமென்ன? அடையப்போகும் நன்மையென்ன? வென்பது தெளிவு. இரு சமுதாயக் கொள்கையை வெற்றி பெறச் செய்வதும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி சமுதாயங்கள் என்று நிரூபிப்பதுமே பாகிஸ்தானின் லட்சியம்.

1940-ல் மிஸ்டர் ஜின்னா வாயிலிருந்து வந்த இரு சமுதாயக் கொள்கை தொத்து வியாதிபோல் முஸ்லிம் சிந்தனையை பீடித்தது. மஹாத்மா காந்திஜீ முயன்றும் நோயைத் தடுக்க முடியவில்லை. மாகாணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக பீடிக்கப்பட்டன. முடிவில் எல்லைப்புறமும் தப்பவில்லை. ஹிட்லர் போல் இந்திய முஸல்மான்களை ஆக்ரமித்து வந்த மிஸ்டர் ஜின்னாவை தடுத்து நிறுத்த யாராலும் முடியவில்லை.

அவருடைய வேகம் காஷ்மீரில் தடைபட்டது. ஷேக் அப்துல்லாவும் காஷ்மீர் மக்களும் இரண்டு சமுதாயக் கொள்கைக்கு சவால் விடுத்தனர். காஷ்மீர் மிஸ்டர் ஜின்னாவின் 'ஸ்டாலின் கிராட்' அல்லது 'வாட்டர்லூ'வாக அமைந்தது. அவருடைய இறுமாப்புக்கு காஷ்மீர் மக்கள் சரியான அடி கொடுத்தனர்.

காஷ்மீர் பாகிஸ்தானின் ஜீவமரணப் பிரச்னையாகி விட்டது. காஷ்மீரில் வெற்றியடைந்தால் மட்டுமே பாகிஸ்தான் நிலைத்திருக்க முடியும். பாகிஸ்தான் தோல்வியுற்று காஷ்மீர் இந்தியாவில் சேரத் தீர்மானித்தால் இரண்டு சமுதாயக்கொள்கை காஷ்மீரிலேயே புதைந்து போகும். இன்று காஷ்மீர் முஸ்லிம்கள் பாகிஸ்தானில் சேர மறுத்துவிட்டால் நாளை பட்டாணிஸ்தானும் பாகிஸ்தானிலிருந்து வெளியேற முடியும். இதே நிலைமை சிந்துவிலும் ஏற்படலாம். அந்நிலையில் பாகிஸ்தானே குலைந்துபோக நேரிடும். இரு சமுதாயக் கொள்கையே பாகிஸ்தானுக்கு அஸ்திவாரம். அது தகர்ந்த பிறகு பாகிஸ்தான் நிலைத்திருக்க முடியாது. பாகிஸ்தானிகள் இதை நன்றாக உணர்ந்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் படைகள் முழு பலத்தையும் கொண்டு போராடுவதற்குக் காரணம் இதுதான்.

முஸ்லிம்கள் தனி சமுதாயம். முஸ்லிம்களை மெஜாரிடியாகக்கொண்ட காஷ்மீர் பாகிஸ்தானுக்கே சொந்தமென்ற வாதம் இன்று வெற்றியடைந்துவிட்டால் நாளை ரஷ்யாவிலும் இரண்டு சமுதாயங்கள் (முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள்) இருக்கின்றன. எனவே முஸ்லிம்கள் மெஜாரிடியாக இருக்கும் துர்க்கிஸ்தான், கைவா, புகாரா, ஆஜர்பய்ஜான் முதலிய பிரதேசங்கள் ரஷ்யாவிலிருந்து பிரிக்கப்பட்டு பாகிஸ்தானுடன் இணைக்கப்படவேண்டுமென்றும் பாகிஸ்தான் கோர முடியும். இரண்டு சமுதாயக் கொள்கை ஆசியாவுக்கே ஒரு ஆபத்தாக முடியும்.

மத அடிப்படையில் சமுதாயமென்னும் கூற்று பெருந்தீங்காகும். உலகத்தை சர்வநாசத்தில் ஆழ்த்திய ஹிட்லரின் ஜாதீய தீமையை விட இது எவ்விதத்திலும் குறைந்ததல்ல அதை சீக்கிரமே ஒழிக்க வேண்டியதவசியம்.

மதப்பற்று கொண்ட ஆசிய கண்டத்தில் மத அடிப்படையில் சமுதாயமென்ற நாசகரமான கொள்கை காட்டுத் தீபோல் பரவலாம். பிறகு ஆசிய நாடுகள் அனைத்தும் வங்க, பஞ்சாப் மாகாணங்களைப் போல் அழிவுற்று ஆசிய சமூக கட்டடங்கள் தகர்ந்து தரை மட்டமாக வேண்டியிருக்கும். ஆசியாவின் ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் பல்வேறு மதத்தினர் வசித்து வருகின்றனர். சைனாவில் பௌத்தர்கள், கிருஸ்துவர்கள், முஸ்லிம்கள், ஷீண்டோக்களும் ரஷ்யாவில் கிருஸ்துவர்கள், முஸ்லிம்களும் மலேயாவில் முஸ்லிம்களுடன் பௌத்தர்களும், துருக்கி, எகிப்துதேசங்களில் முஸ்லிம்களுடன் கிருஸ்துவர்கள் யூதர்கள், கிப்திகளும் சேர்ந்து வாழுகின்றனர். மிஸ்டர் ஜின்னாவின் இருசமுதாயக்கொள்கை வெற்றியடைந்தால் ஆசியாவின் கட்டுக்கோப்பே குலைந்து போகுமென்பதில் சந்தேகமில்லை.

## காஷ்மீர் போரின் உன்னத லட்சியம்

இந்த அடிப்படைக் கொள்கையின் வெற்றிக்காகவே நம்படைகள் காஷ்மீரில் போரிடுகின்றன. இந்திய பாதுகாப்புக்கு காஷ்மீர் அவசியமேயாயினும் யுத்தத்துக்கு அதுமட்டும் போதிய காரணமாகாது. அப்படியானால் பிரிட்டனின் பாதுகாப்புக்காக எகிப்து, பாலஸ்தீன்மீது பிரிட்டிஷ் ஆதிக்கம் அவசியமென்று சொல்லும் பிரிட்டனுக்கும் நமக்குமிடையே எவ்வித வித்தியாசமும் இருக்க முடியாது.

காஷ்மீரில் நடப்பது கொள்கைப்போர். நம் லட்சியம் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சி. பாகிஸ்தான் விரும்புவது மத அடிப்படையுள்ள வகுப்புவாத ஆட்சி. இவ்விரு சக்திகளும் காஷ்மீரில் மோதுகின்றன. வகுப்பு சௌஜன்யம், சகிப்புத்தன்மை மீது வகுப்பு துவேஷம் படையெடுத்து காஷ்

மீரில் திக்குகின்றது. ஜனநாயக முற்போக்கு சக்திக்கும் வகுப்புவாத பிற்போக்கு சக்திக்குமிடையே குஸ்தி நடக்கின்றது. நம் நாட்டில் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியை நிலை நிறுத்தியிருக்கின்றோம். ஜனநாயகத்தையும் நம் ஆட்சியின் அடிப்படையையும் பாதுகாக்க காஷ்மீரில் தியாகம் செய்கிறோம். நாம் காஷ்மீரில் தோற்றால் நம் ஜனநாயக ஆட்சியின் அஸ்திவாரமே ஆட்டங் கண்டு விடும். காஷ்மீரில் இரண்டு சமுதாயக் கொள்கை வெற்றியடைவதன் மூலம் இந்தியாவில் ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம் வெற்றியடையும். மிஸ்டர் ஜின்னாவின் கொள்கை தோற்கடிக்கப்படுவதன் மூலம் பண்டித நேரு வெற்றியடைவார்; பாகிஸ்தானின் அஸ்திவாரமே சிதறிப்போகும்.

நம் மஹத்தான கொள்கைக்கே அபாயம் ஏற்பட்டிருக்கையில் நாம் போராடாமல் இருக்க முடியுமா? நம் கொள்கையின் வெற்றிக்காகவே நம் வாலிபர்கள் ரத்தம் சிந்துகின்றனர். பிரிகேடியர் சிங்கும், பிரிகேடியர் உஸ்மானும் அதற்காகவே உயிரை அர்ப்பணித்தனர். நம் கொள்கையின் கொடியை நாட்டுவதற்காகவே தினம் ஒன்றுக்கு பத்துலட்சம் ரூபாய் செலவிடுகின்றோம். ஆனால் காஷ்மீர் போரின் உன்னத லட்சியத்தை பொதுவாக இந்தியர்கள் தெரிந்து கொள்ளவில்லை; அல்லது தெரியப்படுத்த அரசாங்கம் போதுமான முயற்சி செய்யவில்லை

இச்சந்தர்ப்பத்தில் குறிப்பாக ஹிந்து சகோதரர்களுக்கு ஒரு விஷயத்தை சொல்லவேண்டிய அவசியம்.

இரண்டு சமுதாயக் கொள்கையை பெருவாரியான ஹிந்து சகோதரர்கள் எதிர்க்கின்றனர்; ஹிந்து ராஜ்யத்தின் பிற்போக்கு கோஷத்தால் மயங்காமல் இந்தியாவில் இந்தியர்களின் ஜனநாயக ஆட்சியை அமைக்கவே விரும்புகின்றனர். காஷ்மீரில் முஸ்லிம்களுக்கு உதவி செய்து தங்களுடன் சேர்த்துக் கொள்ள ஆசைப்படுகின்றனர். காஷ்மீர் யுத்தத்தின் உட்கருத்து இதுதான். காஷ்மீர் முஸ்லிம்களை சேர்த்துக்கொள்ள முயற்சிப்பவர்கள் இந்திய முஸ்லிம்களை வெறுக்கமுடியாது அப்படிச் செய்வது முரண்பட்ட செய்கையாகும் இந்தியா, காஷ்மீர் முஸ்லிம்களிடையே பாகுபாடு தவறானது இந்தியாவில் முஸ்லிம்கள் சரியாக நடத்தப்படவில்லை என்று கேள்விப்பட்டால் காஷ்மீர் முஸ்லிம்களும் மனமுடைந்து போவர் முதலிலிருந்தே காஷ்மீர் முஸ்லிம்களின் மனதைக் கெடுக்க இந்திய முஸ்லிம்களின் துயரம் பற்றிய கூற்றுக்களை பாகிஸ்தான் ரேடியோ ஓயாமல் கதைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் இரு சமுதாயக்கொள்கைக்கு எதிராக கோடிக்கணக்கான ரூபாய் செலவில் வாளேந்தி போராடிக் கொண்டே இன்னொருபக்கம் வகுப்புவாத உணர்ச்சிக்கு இடமளிப்பது சரியல்ல. வகுப்புவாதத்தைக் கைவிட இஷ்டப்படாவிட்டால் யுத்தத்தை நிறுத்தி, இந்தியாவில் இணைக்கும் முயற்சியை கைவிட்டு காஷ்மீரை பாகிஸ்தானிடமே ஒப்படைத்து விடலாம். ஏககாலத்தில் ஒன்றுக் கொன்று முரண்பட்ட வழிகளில் நடக்க முயலுவதை விட்டு உள்ளச் சுத்தியுடன் ஏதாவது ஒரு வழியில் செல்வதே சரியான காரியமாகும்.

## முஸ்லிம்களின் கடமை

பூரா பொறுப்பும் ஹிந்து சகோதரர்கள் மீதே சுமத்திவிட முடியாது. முஸ்லிம்களிடம் அவர்களுக்கு இருந்துவரும் மனக்குறை, சந்தேகம் வெறுப்புக்கு அறவே காரணமில்லாமலில்லை. முஸ்லிம்களின் கடந்த பத்து வருஷப் போக்கு வெறுப்பூட்டக் கூடியதாயிருந்தது. அதை மறக்காமலிருக்கும் ஹிந்துக்கள் முஸ்லிம்களின் விஸ்வாஸத்தை நம்பாமலிருப்பது இயற்கை அதனால் வேதனையடைந்து ஒதுங்கும் முஸ்லிம்கள் மீது ஹிந்துக்களுக்கு அவநம்பிக்கை அதிகரிக்கவே செய்கின்றது. தங்களை நம்பினால் ஒத்துழைக்க முன்வரலாமென்பது முஸ்லிம்களின் எண்ணம் விஸ்வாஸத்தை நிரூபித்துக்காட்டாதவரை நம்ப முடியாதென்பது ஹிந்துக்களின் முடிவு.

இந்த நிலைமையை செயல் மூலமே சீர் செய்ய முடியும். செயல் உலகத்திலேயே பெரும் சக்தி. பெரிய அறிவாளிகள், தத்துவ ஞானிகளால் முடியாததையும் செயலால் சாதிக்க முடியும் ஒரு பிரிகேடியர் உஸ்மானின் வீரமரணம் புரட்சி கரமான மாறுதல் ஏற்படுத்தி விட்டது. காஷ்மீர் பிரச்னை முஸ்லிம்களுக்குக் கிடைத்த அருமையானதொரு சந்தர்ப்பம். தொண்டை கிழிய விஸ்வாஸப் பிரமாணம் எடுத்து சுயமரியாதை இழக்க வேண்டிய அவசியமேயில்லை. விஸ்வாஸம் தானாகவே நிரூபிக்கப்பட முடியும். துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம்கள் அதையும் இழந்து வருகின்றனர்.

காஷ்மீர் விஷயத்தில் லீக் பிரமுகர்கள் வாயை மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்து இந்திய முஸ்லிம்கள் காஷ்மீர் போரில் பாகிஸ்தானையே ஆதரிக்கின்றனரென்று ஹிந்து சகோதரர்கள் சொல்லுவார்களாயின் அதை தவறு என்று சொல்ல முடியுமா? கடந்த பத்து வருஷங்களாகவே மிஸ்டர் ஜின்னாவையும் பாகிஸ்தானையும் எதிர்த்துப் போராடி வரும் காங்கிரஸ் முஸ்லிம்களைக் குறித்து சந்தேகிக்க முடியாதாயினும் பாகிஸ்தானை எதிர்க்காத முஸ்லிம்களைப் பற்றி வேறெந்த முடிவுக்கு வர முடியும்?

# இந்திய முஸ்லிம்களின் ஜீவமரணப் பிரச்னை

முஸ்லிம்கள் காஷ்மீர் பிரச்னையில் இந்தியாவை ஆதரிக்கவேண்டுமென்று நாம் யோஜனை கூறுவது விஸ்வாஸத்தை நிரூபித்துக் காட்டவோ அல்லது ஹிந்துக்களை திருப்தி செய்வதற்கோ அல்ல. இந்தியா, பாகிஸ்தான் டொமியன்களுக்கு அவசியமாயினும் இல்லாவிடினும் நாலரை கோடி இந்திய முஸல்மான்களுக்கு காஷ்மீர் ஜீவமரணப் பிரச்னையென்பதில் சந்தேகமேயில்லை. ஜனநாயகத்துக்கும் இரண்டு சமூதாயக் கொள்கைக்குமிடையே காஷ்மீர் யுத்தகளத்தில் இறுதி முடிவு செய்யப்பட விருக்கிறது. இந்தியாவில் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சி அமைய வேண்டுமென்று சொல்லுகின்ற முஸ்லிம்கள் அதே மூச்சில் இரண்டு சமுதாயக் கொள்கை வெற்றியடைந்துகாஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டுமென்று மனதுக்குள் நினைப்பது மதியிழந்த முரண்பாடாகும்.

இரண்டு சமுதாயக் கொள்கை வெற்றியடைய ஆசைப்பட்டால் முஸ்லிம்கள் பாகிஸ்தான்வெற்றிக்கு பஹிரங்கமாய் பிரார்த்திக்கலாம். அத்துடன் இரண்டு சமுதாய அடிப்படை கொண்ட ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தையும் ஆதரிக்கத்தான் வேண்டும். முஸ்லிம்மெஜாரிடி பிரதேசங்களில்முஸ்லிம் ஆட்சியை விரும்புவதும் ஹிந்து மெஜாரிடி பிரதேசங்களில் ஹிந்து ராஜ்யம் ஏற்படுவதை விரும்பாமலிருப்பதும் நேர்மையற்ற நீசத்தனமாகும்.

ஹிந்துக்களை விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமென்று தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு யோஜனை கூறிவிட்டு தாங்கள் மட்டும் எதற்காக ஹிந்துக்களுடன் சேர்ந்திருக்க வேண்டும்? காஷ்மீர் பாகிஸ்தானில் சேர ஆசைப்படுபவர்கள் பாகிஸ்தானுக்கு என் போவதில்லை? வாங்கும்போது வகுப்புவாதிகளாய் மாறுவதும்கொடுக்கவேண்டியது கட்டம் வரும்போது மட்டும் ஜனநாயக வாதிகளாக வேஷம் போடுவதும் நேர்மையல்ல; ஒழுக்கமல்ல மனிதர்களுக்கு அழகல்ல. வாங்கும்போதும் கொடுக்கும் போதும் தனித்தனி படிகளைக் கொண்டு அளப்பது பித்தலாட்டமாகும்.

இரண்டு சமுதாயக் கொள்கை வெற்றியடைந்து காஷ்மீர் பாகிஸ்தானுக்குச் சாதகமாய் ஓட்டு செய்யுமாயின் இத்தியாவில் ஜனநரயக சக்தி பலஹீனமடைந்து பண்டித நேருவுக்கு பதிலாக ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம் அதிகாரத்துக்கு வந்து இந்தியாவில் ஹிந்து ராஜ்யம் அமைந்து விடும். முஸ்லிம் மெஜாரிடி பிரதேசங்களில் முஸ்லிம் ஆட்சி என்றால் ஹிந்து மெஜாரிடி பிரதேசங்களில் ஹிந்து ராஜ்யம் அமைவதே நியாயமுமாகும்

ஆகையால் காஷ்மீர் யுத்தம் முஸ்லிம்களின் ஜீவமரண யுத்தமாகும். பாகிஸ்தான் வெற்றியடைந்தால் நாலரைகோடி இந்திய முஸ்லிம்கள் முடிவடைந்து விடுவர். இந்தியா வெற்றியடைந்தால் காஷ்மீர்முஸ்லிம்களுடன் இந்திய முஸல்மான்களும் உயரிய அந்தஸ்தை அடைய முடியும் அத்துடன் ஹிந்து ராஜ்ய கோஷமும் ஓய்ந்து போகும்.

ஹிந்துக்கள் தங்கள் விவேகத்தையும் அரசியல் மேதையையும் நிரூபித்துக் காட்டுவதற்கும் முஸ்லிம்கள் தங்களுக்காக மஹத்தான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் காஷ்மீர் பிரச்னை ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

## முஸ்லிம்களுக்கு மூன்று வழிகள்

இன்று முஸ்லிம்களுக்கு முன்னால் மூன்று வழிகள் திறந்திருக்கின்றன.

1. ஹிந்து ராஜ்யம் அமைவதற்கு முஸ்லிம்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவது.

2. இந்தியாவிலிருந்து கொண்டே பாகிஸ்தானுக்கு ஐந்தாம் படை வேலை செய்து இந்தியா பூராவையும் பாகிஸ்தானாக்க முயற்சிப்பது.

3. இந்தியாவில் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சி அமைப்பதற்கு ஒத்துழைப்பது.

மேற்கூறிய மூன்று வழிகளைத் தவிர முஸ்லிம்களுக்கு நான்காவது வழியில்லை.

முதல் வழியை மேற்கொண்டு முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குச் சென்றால் அவர்களுடன் பாகிஸ்தானும் சேர்ந்து அழிந்து விடுமென்பது நிச்சயம். நாலரை கோடி மக்களின் சுமையை சுமக்கும் சக்தியுள்ள ஒரு நாடு உலகத்திலேயே இல்லை. பாகிஸ்தானுக்கு எற்கனவே சென்ற சில லட்சம் முஸ்லிம்கள் அடைந்த துர்கதி பார்த்தாய் விட்டது அவர்கள் இந்தியாவுக்கே திரும்பிவர துடிக்கின்றனர். எனவே இந்திய முஸல்மான்களுக்கு பாகிஸ்தான் போகும்படி எந்த ஒரு புத்திசாலியும் யோசனை சொல்ல முடியாது

முஸ்லிம்கள் விரும்பினால் இரண்டாவது வழியை மேற்கொள்ளலாம். அரும்பாடுபட்டு வாங்கிக் கொடுத்த பாகிஸ்தானை ஆதரிப்பதற்கென்றே வாழ்க்கையை அர்ப்பணித்து ஐந்தாம் படை வேலை செய்யலாம். இந்தியாமீது படையெடுக்க பாகிஸ்தானை தூண்டலாம். லண்டனைச் சேர்ந்த சௌத்ரி ரஹ்மத் அலி போட்ட திட்டப்படி இந்தியா பூராவையும் பாகிஸ்தானாக்க முயற்சி செய்யலாம். பிரிட்டிஷாரை

நம்பி ஜெர்மனியை பகைத்துக்கொண்ட போலந்து வாசிகள் பிரிட்டிஷார் வருவதற்கு முன்பே ஜெர்மன் ராணுவத்தால் அழிக்கப்பட்டதைப்போல் பாகிஸ்தான் இந்தியா மீது படையெடுத்து இந்தியாவை பாகிஸ்தானுக்குவதற்கு முன்பே இந்திய முஸ்லிம்களும் அழிந்துபோவாரென்பது நிச்சயம். அதன் பிறகு நடக்கப்போவதை பார்ப்பதற்கும் இருக்கமாட்டார்கள். தற்கொலைக்கொப்பான இந்த வழியை முஸ்லிம்கள் மேற்கொள்ள மாட்டார்களென்று நம்பலாம்.

மூன்றாவது வழியை மேற்கொள்வதால் இந்திய முஸ்லிம்கள் மஹத்தான எதிர்காலத்தை உருவாக்கலாம். கடந்த கால தவறுகள் கருத்தில் கொண்டு வருங்காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும். பழைய மனக்கசப்புகளையெல்லாம் உள்ளத்திலிருந்து அகற்றி நாட்டு மக்கள் அனைவரையும் சகோதரர்களாக பாவித்து அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். தாய் நாட்டுக்கு அபாயமென்றால் முஸ்லிம்கள் முன்னணியில் நின்று எதிர்த்துப் போராடவேண்டும். காங்கிரஸ் மஹாசபை அமைக்க முயற்சிப்பதும் நம் அன்புக்குரிய தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் உருவாகி வருவதுமான ஜாதி மத வகுப்பு அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சி அமைப்பதில் ஒத்துழைக்க வேண்டும். அதில் இரண்டு சமுதாயக் கொள்கைக்கு இடமில்லை. இந்தியாவில் மட்டுமின்றி உலகத்தின் எப்பகுதியிலும் இருசமுதாய நோய் தலைதூக்குவதை ஒழித்துக் கட்ட முஸ்லிம்கள் முன்வரவேண்டும். தங்கள் சுபிட்சக் கதவின் திறவுகோல் முஸ்லிம்களின் கையிலேயே இருக்கிறது. தங்கள் வருங்கால சந்ததிகள் பேரில் இரங்கி அவர்களுடைய சுபிட்சத்துக்கும் சுக வாழ்வுக்குமான கதவை திறந்துவிடுவது முஸ்லிம்களின் கடமையாகும்.

நெருக்கடியான இக்கட்டத்தில் காஷ்மீரில் போரிட முஸ்லிம்கள் கூட்டங் கூட்டமாகச் செல்ல வேண்டும். முஸ்லிம் தலைவர்களின் தூது கோஷ்டிகள் காஷ்மீருக்குச்சென்று ''நாலரைகோடி இந்திய முஸ்லிம்களாகிய நாங்கள் உங்கள் போராட்டத்தை மனப்பூர்வமாய் ஆதரிக்கிறோம், நீங்கள் இந்திய யூனியனிலேயே சேர்ந்திருங்கள். வருங்கால தேர்தல்களில் இந்தியாவை ஆதரித்து ஓட்டு செய்யுங்கள்'' என்று பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
''ஆஸாத்'' விற்பனை செய்ய
**ஏஜெண்டுகள் தேவை.**

# உலக ஞானம்.

'பியாகிங்க் கெஜட்' உலகத்திலேயே பழைய பத்திரிகை.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தின் முதலாவது வாரப் பத்திரிகை 1622-ல் வெளிவந்தது.

ஃ ஃ ஃ

மிஸ்டர் சர்ச்சில் இங்கிலாந்திலேயே பழைய பத்திரிகையான 'மார்னிங் போஸ்ட்' நிருபராக இருந்தார்.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தைச் சேர்ந்த ஸர் ஜார்ஜ் கிரேஸ் என்பவருக்கு 175 பாஷைகள் தங்கு தடையின்றி பேசுவதற்கு தெரியும்.

ஃ ஃ ஃ

உலகம் பூராவையும் முதன் முதலாக சுற்றுப் பிரயாணம் செய்த மனிதர் ஸர் பிரான்ஸிஸ்டிரேக் என்ற ஆங்கிலேயராவார்.

ஃ ஃ ஃ

தென் அமெரிக்காவிலுள்ள ஒரு ஆறு முன்னும் பின்னுமாக இரண்டு திசையிலும் ஓடுகின்றது.

ஃ ஃ ஃ

150 வருஷங்களுக்கு முன் முதன் முதலாக தயாரிக்கப்பட்ட அலாரம் கெடியாரம் இதுவரை சரியாக காலத்தைக் காட்டுகிறது.

ஃ ஃ ஃ

நியூயார்க்கிலுள்ள ஒரு மியூஸியத்திலுள்ள யானை இறந்த பிறகும் இரண்டு வருஷங்கள் நின்ற நிலையிலேயே இருந்ததாம்.

ஃ ஃ ஃ

உலகத்திலேயே நீளமான சுரங்கம் ஐரோப்பாவிலுள்ள 'பாரினீர்' மலையிலிருக்கிறது அதன் நீளம் 25 மைல்.

ஃ ஃ ஃ

இந்தியாவிலிருந்த மொத்தம் 584 சமஸ்தானங்களில் கத்தியவாரில் மட்டும் 383 சமஸ்தானங்கள் இருந்தன.

ஃ ஃ ஃ

இந்திய சமஸ்தானங்களில் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட சமஸ்தானம் காஷ்மீரம். அதன் விஸ்தீரணம் 85,825 சதுர மைல். எல்லா சமஸ்தானங்களையும்விட அதிக வருமானமுள்ளது ஹைதராபாத். அதன் வருமானம் 14,43,61,480 ரூபாய்.

ஃ ஃ ஃ

மிகவும் குறைந்த ஜனத்தொகையுள்ள சமஸ்தானம் குஜராத்தின் மலைப் பிரதேசத்திலிருக்கின்றது. அதில் 29 வீடுகளே இருக்கின்றன.

ஃ ஃ ஃ

எல்லாவற்றையும்விட குறைந்த வருமானமுள்ள சமஸ்தானம் குஜராத்தில் இருக்கின்றது. அதன் மாத வருமானம் எட்டு ரூபாய்தான்.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 27—9—'48 திங்கட்கிழமை { இதழ் 35


## நவ இந்தியா.

அன்றிருந்த இந்தியா வேறு. இன்றிருக்கும் இந்தியாவேறு. இன்றைய இந்தியா அடிமை அல்ல. சுதந்திர முள்ளதொரு நாடு. ஏழு கடல் கடந்திருப்பவர்களின் ஆதிக்கம் அகன்று இந்திய அரசியலில் இந்தியமக்களே அதிகாரத்திலிருக்கின்றனர். ஆயினும் மஹத்தான இப்புரட்சியின் உணர்ச்சியை உலகத்திலுள்ள சிலர் இன்னும் உணர வில்லை. அவர்களுடைய எண்ணங்களும் நோக்கங்களும் அடிமை இந்திய நிலைமையை அனுசரித்ததாகவே இன்றைக்கும் இருந்து வருகின்றன.

இன்றைய மாறுபட்ட நிலைமையில் பிரச்னைகளின் தன்மை மட்டுமின்றி அநேக பிரச்னைகளே அடியோடு மாறிவிட்டன. அவற்றில் முக்கியமானது வகுப்புப் பிரச்னை. விடுதலைக்குமுன், பாகிஸ்தான் அமைவதற்கும் முன்னாலிருந்ததைப் போலவே இன்றைக்கும் இந்தியாவில் வகுப்புப்பிரச்னை இருப்பதாகபாகிஸ்தான் அல்லது இதர நாடுகளில் இருப்பவர்கள் தவறாக நினைப்பதாக இருந்தால் அவர்கள் ஏமாற்றமடைவது நிச்சயம்.

ஹிந்து முஸ்லிம்களிடையே வெறுப்புத்தீயை மூட்டிய வெள்ளையர்கள் நாளாவட்டத்தில் நாடுபூராவிலும் அதைப்பரவச் செய்தார்கள். முடிவில் அவர்கள் வெளியேறிக்கொண்டிருந்த சமயத்தில் இந்தியர்களின் வீடுகள் பற்றிஎரிந்து கொண்டிருந்தன. தேசம் இரண்டாக வெட்டப்பட்ட பயங்கர காட்சியுடன் வெள்ளை கபட நாடகத்தின் கடைசி கட்டமும் முடிவடைந்து விட்டது.

கலவரங்கள் ஓய்ந்தன ஹிந்து முஸ்லிம்கள் விழித்தனர். தங்கள் இருவரையும் அடக்கியாண்டு ஆட்டிவைத்த மூன்றாவது சக்தி மறைந்து தங்களுக்குத் தாங்களே ஜவாப்தாரியாக இருப்பதை உணர்ந்தனர் இவ்வித உணர்ச்சியால் இந்தியர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல் வகுப்பு வேற்றுமையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டது. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் இந்தியப் பிரஜைகளாயிருக்கும் அனைவரும் இனி மத அடிப்படையில் தேசத்தின் நலன் பிரிக்கப்பட முடியாதென்று உணர்ந்துவிட்டனர்.

ஹிந்து, முஸ்லிம்களின் வகுப்புவாதக் கோரிக்கைகள் சச்சரவுகளை அரசியல் தராசில் எடைபோட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த மூன்றாவது சக்தி மறைந்து விட்டபிறகு அரசியலின் தன்மையே மாறிவிட்டது. இன்றுள்ள ஜனநாயக ஆட்சியில் தேசநலன் ஹிந்துவென்றும் முஸ்லிமென்றும் பிரிக்கப்பட முடியாது. இனிதேசநலனுக்கு சர்வதேச நலனே அடிப்படையென்பதை இந்திய முஸ்லிம்கள் கூட நன்றாய் உணர்ந்துவிட்டனரென்றால் ஹிந்துக்களைப் பற்றி எழுதவேண்டிய அவசியமேயில்லை.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை நிர்ணயிக்கவும் தங்கள் நலனுக்குகந்த வகையில் வெளியுலகுடன் துடர்பு கொள்ளவும் ராணுவத்தை தங்களிஷ்டப்போல் உபயோகிக்கவும் உரிமை யில்லாதிருந்த காலத்தில் இந்திய நலனை ஹிந்து, முஸ்லிம் என்று பிரித்து உத்தியோகங்கள் பதவிகளுக்காக சண்டை போடுவதைத்தவிர இந்தியர்களுக்கு வேறு வேலையிருக்கவில்லை விடுதலைக்குப்பிறகு இந்த நிலைமை அடியோடு மாறிவிட்டது. ஹிந்துக்களின் நலன் என்ன? முஸ்லிம்களின் நலன் என்ன? என்ற பிரச்னை இனி முக்கியமல்ல. சர்வதேச அடிப்படையில் இந்தியாவின் நலன் என்ன? என்பதே இனி பிரதானம். அன்று உள்நாட்டு அரசியலில் மட்டும் உழன்றோம். அதற்காக சண்டை யிட்டுக்கொண்டோம். இன்று இந்தியாவின் வெளிநாட்டு அரசியலும் நம் கையிலிருக்கிறது மஹத்தான இவ்வேலையை செய்வதற்கே நமக்கு அவகாசம் போதாது.

இன்றைய புதிய நிலைமையில் இந்தியா ஒரு பக்கம்; அகில உலகமும் இன்னொரு பக்கம். இந்திய நலனை பாதுகாப்பதற்காக தியாகம் செய்வது இந்தியனின் முதல் கடமை. அதற்குப் பிறகுதான் இதர எல்லா பிரச்னைகளும். ஈரான், ஆப்கானிஸ்தான், அல்லது பாகிஸ்தான் நலத்துடன் இந்திய நலன் மோதினால் ஹிந்துக்களைப் போலவே முஸ்லிம்களும் இந்திய நலனுக்காக தங்கள் உயிரை அர்ப்பணிப்பர் அந்த நாட்டினர் முஸ்லிம்கள் என்பதற்காக இந்திய முஸல்மான்கள் கடமையை செய்யத் தயங்கமாட்டார்கள். இந்திய நலன் இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் முஸ்லிம்களின் கூட்டு நலனாகும். இந்தியர்கள் என்ற முறையில் இருவருக்கும் சம உரிமையும் கடமையும் உண்டு.

# சரித்திர சான்றுகள்.

## முஸ்லிம்களுக்குள்ளேதான் சண்டைகள் நடந்தன.

பதிமூன்ருவது நூற்ருண்டின் ஆரம்பத்தில் 1206-ல் குத்புதீன் ஐபக் தனது ஆதிபத்தியத்தை நிறுவியதிலிருந்து பதினெட்டாவது நூற்ருண்டின் இறுதியின் பிரிட்டிஷார் இந்நாட்டில் வேரூன்றிய காலம் வரை சுமார் 600 வருஷங்களாக,—இந்தியாவின் சரித்திரம், ஹிந்துக்கள் ஒரு கட்சியாகவும், முஸ்லிம்கள் எதிர்கட்சியாகவும் நிலையாகச் சண்டையிட்ட சரித்திரமல்ல. இந்தக்காலத்தில் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் நடந்த சண்டைகளைக் காட்டிலும் அதிகமான சண்டைகள் முஸ்லிம்களுக்குள்ளேயே நடந்தன என்பதைக் காட்டுவது இங்கே பொருத்தமில்லை; இடமும் இல்லை. சுருக்கமாக மாத்திரம் அதைக் கவனிப்போம்.

இக்காலத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: ஒன்று சுல்தான்கள் டில்லியில் ஆண்டகாலம்; மற்ருென்று மொகலாயர்கள் ஆண்டகாலம். முன்னர்க் கூறிய காலப்பகுதியில் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் வடக்கே இமயத்திலிருந்து தெற்கே இராமேஸ்வரம் வரையும், மேற்கெல்லைப் பிரதேசத்திலிருந்து கிழக்கே ஒரிஸா, வங்காளம் வரையும் முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டுப் பரவிய தன்றி ஆங்காங்கே முஸ்லிம் அரசர்களால் ஆளப்பட்ட சிறு சிறு ராஜ்யங்களும் தோன்றின. டில்லியில் அரசாண்ட ராஜவம்சங்களும் மாறின. டில்லி சுல்தான்கள் ஹிந்துக்களிடமிருந்து இந்தியாவின் பகுதிகளைக் கைப்பற்றிய தோடல்லாமல் தங்களை எதிரிட்டுக் கலகம் செய்த தங்களது சேனு வீரர்களை அடக்குவதிலும், அவர்கள் வசப்படுத்திக்கொண்ட நாட்டை மீட்பதிலும் பெருங் கவனத்தையும் காலத்தையும் செலவழித்தார்கள் 1193-க்கும் 1526-க்கும் இருந்த இடைக்காலத்தில் டில்லிச் சிம்மாசனத்தில் அமர்ந்த சுல்தான்களின் எண்ணிக்கை 35-க்குக்குறையாது. இவர்கள் சுமார்

---

இந்த நிலைமை இதற்குமுன் இருக்கவில்லை. இந்திய பாதுகாப்பு பொறுப்பு வெள்ளையர்களிடம் மட்டுமே இருந்தது. வயிற்றுக் கொடுமைக்கு கூலிக்காரர்களாக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ராணுவத்தில் சேர்ந்திருந்தனர் இன்று நிலைமையை அடியோடு மாற்றிவிட்ட விடுதலைக்குப் பிறகு தானுகவே ஏற்பட்டிருக்கும் தேசீய மனப்பான்மை அன்று அவர்களுக்கு இருக்கவில்லை.

எந்த ஒரு இந்திய முஸ்லிமும் இந்தியாவுக்கு எதிராக இதர நாட்டை ஆதரிப்பானென்று பாகிஸ்தான் அல்லது இதர நாடுகளில் வசிக்கும் ஒருவன் நினைத்தால் அவன் பைத்தியக்காரனேயாவான். அவனுக்கு ஏற்ற இடம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியே யாகும். இவ்வித பைத்தியங்களின் மனித இயற்கைக்கு எதிரான பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படக் கூடாது. தங்கள் நாடு தங்கள் சர்க்கார் நலனுக்கு எதிராக இதர நாடுகளின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சில துரோகிகள் இதர நாடுகளைபோலவே இந்தியாவிலும் இருக்கலாம். கடந்த மஹா யுத்தத்தில் எவ்விதமான வகுப்பு பிரச்னையுமில்லாத இங்கிலாந்திலும்கூட இம்மாதிரியான துரோகிகள் இருக்கத்தான் செய்தனர்.

முஸ்லிம்களின் விஸ்வாசத்தைக் குறித்து ஏற்கனவே நாம் எழுதியுள்ளோம். சமயம் வரும்போது தங்களுடைய விசுவாசத்தை அவர்கள் செயல்கள் மூலம் நிரூபித்துக் காட்டுவார்களென்று உறுதியுடன் நம்பி தெரிவித்திருந்தோம். அப்பொழுது ஆத்திரமூட்டும் பொறுப்பற்ற அறிக்கைகள் மூலம் இந்திய முஸல்மான்களின் தேசப் பற்றை சந்தேகிக்கும்படிச் செய்துவந்த சிலர் பாகிஸ்தானிலும் ஹைதராபாதிலும் இருந்து வந்தனர். தவருன பிரசாரத்தின் மூலம் இந்திய மக்களை தூண்டுவதிலும் இந்திய சர்க்காரை மிரட்டுவதிலுமே அவர்களுடைய நன்மை அடங்கியிருந்தது. அவர்களுடைய கெட்ட எண்ணம் தெரிந்திருந்தும் சிலர் அதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஹைதராபாத் பிரச்னை எழுந்தது. அவர்கள் பேசியதெல்லாம் பொய்யென்று நிரூபணமாகிவிட்டது.

விடுதலைக்குப் பிறகு உருவாகி யிருக்கும் நவ இந்திய நிலைமையை பழைய இந்திய நிலைமையைக் கொண்டு அளப்பது அறிவீனமென்பதை இன்று உலகம் அறிந்துக்கொண்டு விட்டது. இன்று ஹிந்துக்களைப்போலவே இந்திய முஸல்மான்களும் இந்திய நலனில் ஆர்வம் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை ஹைதராபாத் தனித்து இருப்பது இந்தியாவுக்கு பலஹீனம். இந்தியாவுடன் சேர்ந்திருப்பதால் ஹைதராபாத் பலனடைய முடியும். இந்நிலையில் இந்தியாவை ஆதரிப்பதைத் தவிர வேறுவிதமாக முஸ்லிம்கள் போயிருக்க முடியாதென்பது வெளிப்படை. நவ இந்தியாவின் குறிப்பிடத்தக்க அம்சம் இதுதான். இனி வெளியிலிருப்பவர்கள் எவ்வளவுதான் தவருன பிரசாரம் செய்து கொண்டிருப்பினும் இனி இந்த அடிப்படையைக் கொண்டே ஒவ்வொரு பிரச்னையும் பரிசீலிக்கப்படும்.

ஐந்து வம்சங்களைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு வம்சமும் இஸ்லாமைச் சேர்ந்ததே. ஒன்றை விரட்டி விட்டு வந்து உட்கார்ந்த மற்ற வம்சமும் இஸ்லாமைச் சேர்ந்ததுதான். சிம்மாசனத்தில் அமர்ந்து ஆண்ட 35 மன்னர்களில் 19 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கொலையுண்டு முடி வெய்தினர். அவர்கள் முடிவு ஹிந்துக்களாலல்ல; முஸ்லிகளால்தான் என்பது கவனிக்கத்தக்கது.

சுதந்திரம் பூண்ட அல்லது அரை குறைச் சுதந்திரம் பூண்ட நாடுகளில் வங்காளம், ஜான்பூர், குஜராத், மாளவம், காண்டேஷ், பாமினி முதலியவைகளைக் குறிப்பிடலாம். பாமினி, சிலகாலம் கழித்து, பீரார், ஆமது நகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார் என்ற ஐந்து ராஜ்யங்களாகப் பிரிந்தது இவை ஒவ்வொன்றும் தனித்தனிச் சரித்திரம் பெற்றிருக்கின்றன. அச்சரித்திரங்கள், சுற்றியுள்ள முஸ்லிம் அரசர்களோடும் டில்லி அரசர்களோடும் இந்நாடுகளிட்ட போர்களின் சரித்திரங்களாகவேயிருக்கும். ஒருக்கால் எங்கேனும் ஒரு பகுதியை ஆண்ட இந்து அரசனோடு புரிந்த போரின் வரலாறும் அதில் இருக்கக் கூடும்.

இந்திய முஸ்லிம் அரசர்கள் வடமேற்கிலிருந்து அடிக்கடி தாக்கிய முஸல்மான்களோடு போரிட வேண்டியிருந்தது. அல்லாவுதீன் காலத்திலிருந்து மேற்கிலிருந்து வரக்கூடிய படையெடுப்புக்களைச் சமாளிப்பதற்கென்றே அரண்களும் மற்ற ஏற்பாடுகளும் செய்து எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டியதிருந்தது.

1526-ல் பானிபட்டில் பாபர், இப்ரஹீம் லோடியை வென்று மொகலாய சாம்ராஜ்யத்திற்கு அடிகோலிய பிறகு, அவனுடைய சந்ததியார்களுக்கு டில்லிச் சிம்மாசனம் மலர்ப்படுக்கையாக இருக்கவில்லை அவன் மகன் ஹுமாயூன் தன் சகோதரனை காம்ரானோடு சண்டை போட வேண்டியிருந்தது. காம்ரான் தனக்குரிய காபூல், காண்டஹார் போதாதென்று லாகூரைக் கைப்பற்றிப் பஞ்சாப் முழுவதையும் தன் வசப்படுத்திக்கொண்டான். ஹுமாயூன் தனது மற்றச் சகோதரர்களான ஹிந்தால், மிஸ்ரா அஸ்காரியோடு சண்டையிட வேண்டியிருந்தது. சண்டையில் ஹிந்தால் கொல்லப்பட்டான். காம்ரான் கைதியாக்கப் பட்டான். அவனது கண்பார்வை போக்கப்பட்டது. அஸ்காரி பிடிபட்டான் ; மெக்காவுக்குப் போக அனுமதிக்கப்பட்டான்.

வட இந்தியாவில் தனது நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஹுமாயூன் அடிக்கடி சண்டை போட வேண்டிருந்தது. குஜராத் அரசன் பகதூர் ஷாவை அடக்குவதற்குச்சேனையை நடத்திச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால், பீஹாரிலுள்ள ஆப்கானி யத்தலைவன் ஷெர்கான் கலகஞ் செய்ததால் குஜராத்தை வசப்படுத்த முடியவில்லை கடைசியாக ஷெர்கானிடம் டில்லிச்சிம்மாசனத்தை யிழந்துவிட்டு இந்தியாவுக்கு அப்பால் பாரசீக மன்னனிடம் உதவி நாடி அலைந்தான் ஹுமாயூன்.

ஷெர்ஷாவுக்குப்பின் அவன் மகன் சாலிம்ஷா பட்டத்துக்கு வந்தான். அவனால் ஆப்கானியப் பிரபுக்களை அடக்க முடியாததால் அவர்களைச் சிறையில் தள்ளவோ அல்லது அவர்களில் அநேகரைக் கொல்லவோ வேண்டியிருந்தது. பஞ்சாபின் கவர்னர் கலகஞ்செய்தான். ஆனால், தோற்கடிக்கப்பட்டுக் காஷ்மீருக்கு ஓடினான்; அங்கு கொலையுண்டான்.

ஷாலிம்ஷாவுக்குப் பிறகு அவனுடைய மகன் பிரோஸ்கான் பட்டத்துக்கு வந்தான். அவனுடைய தாய்மாமன் முபாரிஸ்கான் அவனைக் கொன்றுவிட்டு மஹமதுஷா என்ற பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினான். அவனுடைய காரியங்களை ஹெமு என்ற ஹிந்து மேற் பார்த்துவந்தான் பிரபுக்கள் கலகம் செய்தார்கள். டில்லியையும் ஆக்ராவையும் இப்ராஹீம் சூர் பிடித்துக்கொண்டான். அவனைச் சிக்கந்தர் சூர் தோற்கடித்தான். இவ்வளவுக்கும் கொக்கைப்போல் காத்துக்கொண்டிருந்த ஹுமாயூன், ஹிந்துஸ்தானத்தின் குழப்ப நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஒரு படையோடுவந்து சிக்கந்தர் சூறைவென்று, 1555-ல் தனது சிம்மாசனத்தை மீண்டும் அடைந்தான். ஆனால், பாவம் சீக்கிரம் மாண்டான்.

ஹுமாயூனுக்குப்பின் அக்பர் வந்தான் அவன் தம்பி ஹக்கீம் காபூலை ஆட்சி செய்தான். காபூல்ஹிந்துஸ்தானத்தின் ஒரு பாகமாகக் கருதப்பட்டு வந்தது. அக்பர் வாலிபன். பைராம்கானுடைய பராமரிப்பில் இருந்துவந்தான். அவனுக்கு ஏற்பட்ட முதல் பெரிய ஆபத்து சூர்களால் ஏற்பட்டது. சூர்களுடைய ஹிந்து மந்திரி ஹெமு டில்லியின்மீது படையெடுத்து மொகலாயச் சேனாதிபதி பீர்பெக் என்பவனைத் தோற்கடித்தான் திறமையற்றவன் என்ற காரணத்திற்காக பீர்பெக் பைராம்கானால் கொல்லப்பட்டான் தனது வெற்றிக்கப்புறம் ஹெமு விக்கிரமாதித்தன் என்று பட்டம் சூட்டிக்கொண்டு சாம்ராஜ்யத்தை ஒரு கை பார்க்கலாமென்று துணிந்தான். பானிப்பட்டில் பைராம்கானால் தோல்வியுற்றுக் கைதியாக்கிக் கொல்லப்பட்டான். அதன்பிறகு சிக்கந்தர் சூரும் அடிபணிந்தான். சூர்வமிசம் 1556-ல் முடிவுற்றது.

பைராம்கானின் மேற்பார்வையிலிருப்பது அக்பருக்குப் பிடிக்கவில்லை. இது விஷயத்தில் அவனுடைய

தாய் ஹமீதா பீகமும், அவனுடைய செவிலித்தாய் மாஹம் அங்காவும், அவள் மகன் ஆதம்கானும் அவனுக்கு ஒத்தாசையாக இருந்தனர். அக்பர் 1560-ல் பைராம்கானை வேலையை விட்டு நீக்கினான். அவனும் கீழ்படிந்து மெக்காவுக்குப் பிரயாணமானான். அவன் மீது ஐயுறவுகொண்ட அக்பர் அவனை நாட்டைவிட்டு சீக்கிரம் கிளம்புவதற்காகப் பீர் முஹம்மதுவின் கீழ் ஒரு படையை அனுப்பினான். இது பைராம்கானுக்கு வெறுப்பூட்டியது. கலகம் செய்தான். அக்பர் பின் தொடரப் பஞ்சாபுக்குச் சென்றான். இறுதியில் பைராம்கான் பணிந்தான். அக்பர் அவனது பழைய சேவைகளுக்காக அவனை மன்னித்து மெக்காவுக்கும் போக அனுமதி யளித்தான். ஆனால் பாதையில் குஜராத்தில், தன் எதிரியான பட்டாணியன் ஒருவனால் கொல்லப்பட்டான்.

அக்பருடைய சேனாதிபதிகள் பீர் முகம்மதும் ஆதம்கானும் மாளவ தேசத்தை ஒரு முஸ்லிம் அரசனிடமிருந்து மிகக்கொடுமைப் படுத்திக் கைப்பற்றினார்கள்.

அக்பர் அடிக்கடி கலகக்காரர்களை அடக்கவேண்டியிருந்தது. அவர்களில் ஒருவன் மாளவத்தில் பீர் முகம்மதுவை விரட்டியடித்த அப்துல்லாகான் உஸ்பெக். மற்றொருவன் ஜான்பூரில் கலகம் செய்த கான்ஜாமன். மற்றவன் அவனுடைய தம்பி மிர்ஸா ஹக்கீம். இவன் உஸ்பெக்குகளால் தூண்டப்பட்டுச் சிம்மாசனத்திற்கு உரிமை கொண்டாடினான். அக்பர் பஞ்சாபை நோக்கிப் படையெடுக்கவும் ஹக்கீம் அவசரம் அவசரமாகப் பின்வாங்கினான். கான்ஜாமன் சண்டையில் தேற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான் அவனுடைய சகோதரன் சிறை பிடிக்கப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டான். மற்றக் கலகக்காரர்கள் கடுமையாக நடத்தப்பட்டார்கள்.

1573-ல் அக்பர் முஸபர்ஷாவிடமிருந்து குஜராத் முழுவதையும் ஜெயித்துத் தன் சாம்ராஜ்யத்தோடு சேர்த்தான். அக்பரின் சரித்திரத்தில் இது ஒரு முக்யமான கட்டமாகும். ஷெர்ஷா காலத்தில் வங்காளம் ஆப்கானியத் தலைவர்கள் வசம் இருந்தது. ஆனால் 1564-ல் பீஹாரைச்சேர்ந்த சுலைமான்கான் கௌரைக் கைப்பற்றி இரு மாகாணங்களுக்கும் தலைவனானான். அவனிறந்தபின் அவனுடைய மகன் பையாசித் அரசனானான். அவனுடைய மந்திரிகள் அவனைக் கொன்று அவனுடைய இளைய தம்பி தாவூதைச்சிம்மாசனத்தில் வைத்தார்கள். தாவூது சாமனியாக்கோட்டையைப் பிடித்ததால் சக்கரவர்த்தியின் கோபத்திற்காளானான். அக்பர் தனது சேனாதிபதியை அனுப்பியதோடு தானும் தாவூதை எதிர்த்துச் சென்று தோற்கடித்து, 1576-ல் அவனைக் கொன்றான். வங்காளமும் பீஹாரும் சாம்ராஜ்யத்தில் சேர்ந்தன. பின்னால் 1592-ல் ஒரிஸாவும் சேர்க்கப்பட்டது.

முஸபர்கான் தூர்ப்பாதி வங்காள கவர்னராகப் பட்டான். அவனுடைய கொடுமையான சட்டங்களும் அநியாய வரியும் அங்குள்ள பிரபுக்களுக்கு ஆத்திரமூட்டின. அக்பர் மதவிஷயங்களில் சல்ஹ-இ-குல் என்ற சமரஸ மனப்பான்மைஉடையவர் இது உலமாக்களுக்குப் பிடிக்கவில்லை. ஜான்பூர் காஜியின் ஆதரவில் அவர்கள் சக்கரவர்த்தியை எதிர்ப்பது சட்டரீதியான செய்கை யென்று பிரகடனம் செய்தனர். இதை அனுசரித்துச் சாக்தாய் ஜாதியைச் சேர்ந்த காக்ஷால்கள், பாபாகான் என்ற தலைவன் கீழ் கௌரைநோக்கிச்சென்றனர். நிலைமையைச் சீர்படுத்த அக்பர், தோடர்மல் என்ற ஹிந்துவை அனுப்பினான். முஸபர்கான் கொல்லப்பட்டான். வங்காளமும் பீஹாரும் காக்ஷால்கள் கைக்குச் சென்றன; எனினும் கடைசியில் கலகம் அடக்கப்பட்டுவிட்டது.

ஹக்கீம் மீண்டும் பஞ்சாப்புக்குள் நுழைந்தான். அக்பர் அவனைத் தோற்கடித்தான் '1585-ல் அவன் இறந்த உடன் காபுல் டில்லியோடு சேர்க்கப்பட்டது. அதை ஆளும் பொறுப்பு ராஜாமான்சிங் என்ற ஹிந்து வசம் ஒப்புவிக்கப்பட்டது. எல்லைப்புர மலை ஜாதியினர் அடக்கப்பட்டனர். காஷ்மீரின் முஸ்லிம் அரசன் கீழ்ப்படிய வைக்கப்பட்டான் காஷ்மீரம் சாம்ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டது. மிர்ஸா ஜானியிடமிருந்து சிந்துவும் சேர்க்கப்பட்டது. 1595-ல் காண்டஹார் சேர்க்கப்பட்டது.

இந்துஸ்தானம் முழுவதுக்கும், ஹிந்து குஷ் மலைக்கப்பாலுள்ள ஆப்கன் பிரதேசங்களுக்கும் தான் அதிபதியான பிறகு அக்பர் தக்காணப்பக்கம் திரும்பினான், பர்ஹாம் நைஜாம்ஷாவின் சகோதரி சாந்த் பீபீ வெகு வீரத்துடன் ஆமது நகரைப் பாதுகாத்தாள். எனினும் அக்பர் ஆமதுநகரை 1600-ல் சேர்த்துக்கொண்டான் பின்பு அவன் பர்ஹான் பூரைத் தாக்கி காண்டேஷ் அரசர் மிரான் பகதூரிடமிருந்து 1601 ல் அசிர்காரைக் கைப்பற்றினான்.

அக்பர் தக்காணத்துக்குப் புறப்பட்டபொழுது தன் மகன் சலீமைத் தலைநகரத்துக்குப் பொறுப்பாக வைத்துவிட்டுச் சென்றான். மானசிங், ஷகுலீகான் இருவருடனும் சேர்ந்துகொண்டு மேவார்மீது படையெடுக்கும் படியும் சொல்லியிருந்தான், ஆனால் இளவரசனே கலகஞ்செய்து சுதந்திரப்பிரகடனம் செய்தான் அக்பர் தெற்கேயிருந்து திரும்பிவந்தான். சலீம் அலகாபாத்தில் சுதந்திர ராஜ்யத்தை ஸ்தாபித்தான். ஆனால் உடனே அக்பரிடம் மன்னிப்புக் கோரினான். சமாதானம் ஏற்பட்டது. சலீமை அரசாட்சிக்குவரவொட்டாதபடி அவனுடைய மூத்தமகன் குஸ்ருவை

சிம்மாசனத்தில் வைப்பதென்று ஒரு சூழ்ச்சி கிளம்பித் தோல்வியுற்றது. 1605-ல் அக்பர் இறக்கவும் சலீம் ஜஹாங்கீர் என்ற பெயரோடு சக்கரவர்த்தியானான்.

ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்தவுடன், அவன் மகனை நடுநாயகமாகக் கொண்டு கிளம்பிய கலகத்தை அடக்கவேண்டியதாயிற்று. குஸ்ரூ ஆக்ராவிலிருந்து தப்பிச் சில பிரபுக்களுடைய உதவியைக்கொண்டு கலகம் செய்தான். பின்னர் தோல்வியடைந்து, கைதியாகி விலங்கிடப்பட்டு சக்கரவர்த்தி முன் நிறுத்தப்பட்டான்; சிறையில் தள்ளப்பட்டான்; அவனைச் சூழ்ந்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். அவனுடைய இனிய சுபாவம், அவனை இன்னொரு சூழ்ச்சிக்கு நடுநாயகமாக்கிற்று, சக்கரவர்த்தியைக் கொன்று இவனைச் சக்கரவர்த்தியாக்குவதற்கு முயற்சிகள் கிளம்பின, ஆனால் இச்சூழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. குஸ்ரூ குருடாக்கப்பட்டான். தனி இருட்டறையில் அனேக வருடங்கள் அடைபட்டுக்கிடந்தான் 1616-ல் அவனுடைய கொடிய எதிரியான ஆசப் கானிடம் ஒப்படைக்கப்பட்டான். ஆசப்கான் அவனை அவனுக்குப் போட்டியான சகோதரன் ஷாஜஹானிடம் ஒப்படைத்தான். ஷாஜஹான் அவனை 1622-ல் கொன்றான். அவன் இறந்த பிறகு அவனுடைய தகப்பன் வருந்தினான். அவனது சவம் இரண்டாந்தடவையாக அலகாபாத்தில் புதைக்கப்பட்டது இப்பொழுது அந்த இடம் குஸ்ரூபாக் என்று அழைக்கப் படுகிறது. நூர்ஜஹானுடைய மருமகன் ஷாஹ்ரியர், ஷாஜஹானோடுபோட்டியிடும் எதிரியாக இருந்தான். ஷாஜஹானும் தன் தகப்பனுக்கு விரோதமாகக் கலகம் செய்தான். 1622-ல் தன்தகப்பன் சாகுமனவும் அவ்வாறே யிருந்தான். பலவிதமாக அனேக வருஷங்களைக் கழித்த பிறகு கடைசியில் சரணடைந்தான். தாராவையும், ஔரங்கசீப்பையும் டில்லியில் பயணமாக வைத்தான். ஜஹாங்கீர் வங்காளத்திலுள்ள ஆப்கானியப் பிரபுக்களையும் அடக்கவேண்டியிருந்தது. ஒரு சமயம் தன்னையும் நூர்ஜஹானையும் கைதியாக்கிய மஹாபத்கான்போன்ற இதரபிரபுக்களையும் அடக்கவேண்டியிருந்தது. இரண்டு சமயங்களில் ஜஹாங்கீர் ஹிந்துக்களை யெதிர்த்துச் சண்டையிட்டான். அதில் ஒன்று 1620-ல் காங்ராவைச் சேர்த்துக்கொண்டதாகும். மற்றொன்று அக்பர் காலத்திலிருந்து மொகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்து வந்த மேவாரைப் பணியவைத்தது. பாரசீகர் முற்றுகையிட்டுக் கைப்பற்ற சாம்ராஜ்யம் காண்டஹாரை இழந்தது

ஜஹாங்கீர் இறக்கவும் ஷாஹ்ரியர் சிம்மாசனத்திலேற முயன்று தோல்வியுற்றான். அவன் கைதியாக்கப்பட்டுக் குருடாக்கப்பட்டான். தனக்குப் போட்டியாக வந்தவர்களை 'வானுலகத்துக்கு அனுப்பிவிட்டு' ஷாஜஹான் சக்கரவர்த்தியானான். அவனுடைய மாமன் ராஜவம்சத்து இளவரசர்களத்தனை பேரையும் இரக்கமில்லாமல் கொன்று குவித்தான். அநேக பெண்கள் தற்கொலை செய்துகொண்டார்கள். ஷாஜஹானுடைய முதற்பெயர் குர்ரம் என்பது. தக்காணத்து முஸ்லிம் ராஜ்யங்களின்மீது போர் தொடுத்து வென்றதனால் ஷாஜஹான் என்ற பட்டம் அவன் தந்தையால் அளிக்கப்பட்டது. 1628-ல் சிம்மாசனத்துக்கு வரவும் பண்டேலாத் தலைவனுடைய கலகத்தையடக்கவேண்டியிருந்தது. 1629-ல் தக்காண கவர்னர் கான்ஜாஹன் லோடி கலகம் செய்ததால் அவனை அடக்கித் தோற்கடித்தான். அவனும் அவனைச் சூழ்ந்து நின்ற நூறு பேரும் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள்.

அக்பர் காண்டேஷையும் (1599) ஆமதுநகரையும் (1600) ஜெயித்து சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான். ஆனால் ஆமது நகரம் அவனுடைய முழு ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்படவில்லை. மாலிக் ஆம்பருடைய எதிர்ப்பினால் ஜஹாங்கீர் காலத்திலும் சரியான முன்னேற்றம் கிடையாது. ஷாஜஹானுடைய வெற்றியும் நீடித்து நிற்கவில்லை. தக்காணத்துச் சுல்தான்கள் அடக்கப்படவில்லை. ஆமது நகர ராஜ்யம் 1633-ல் கடைசியாக முடிவுபெற்றது. பீஜப்பூரும் கோல்கொண்டாவும் ஜெயிக்கப்படாமலிருந்தன. பீஜப்பூர், ஆமது நகருக்கு உதவி செய்ததாலும் ஷாஹ்ஜி ஒரு நைஜாம் ஷாஹிப்பையனை ஆமது நகருக்கு அரசனாக்கியதாலும் சக்கரவர்த்திக்குக் கோபம் மூண்டது. அவர்களைத் தண்டிக்கச் சக்கரவர்த்தி தனது சேனாதிபதிகளை அனுப்பினான்; கோல்கொண்டா அரசனைப பணியவைத்தான். பீஜப்பூரும் சக்கரவர்த்தியின்மேலதிகாரத்தை ஒப்புக்கொண்டது, இதற்குப் பிறகு ஔரங்கசீப் தக்காண ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். சிலகாலம் வரையே சமாதானம் நிலைத்தது மீண்டும் சில வருஷங்களில் சண்டைகள் தொடங்கி விட்டன. பீடார் கைப்பற்றப்பட்டது. குல்பர்கா என்னுமிடத்தில் பீஜப்பூரிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். 1658-ல் கல்யாணிக் கோட்டையும் கைப்பற்றப்பட்டது. அரசியல் காரணங்கள் ஒரு பக்கம் இருக்க, தென்னாட்டு இருவரசர்களும் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர்களென்றதனால் சன்னி வகுப்பைச்சேர்ந்த சக்கரவர்த்தி அவர்களை அடக்க முற்பட்டான்.

" இந்தியா பிரிக்கப்பட்டால்………"

—பாபூ ராஜேந்திர பிரஸாத்.

—(பாக்கி அடுத்த இதழில்)

# பாகிஸ்தான் பத்திரிகை உலகம்.

## 'ஆஸாத்' லாஹூர்

இந்தியா பாகிஸ்தானிடையே கவுரவமான உடன்பாடு ஏற்படுவதை நாம் மனப்பூர்வமாய் விரும்பினோம். தங்களை கேலிக்கூத்தான நிலைமைக்கு உள்ளாக்காமல் ஹைதராபாத் காஷ்மீர் பிரச்னைகளின் சரியான தன்மையை உணரும்படி இந்தியத் தலைவர்களுக்கு பன்முறை யோசனை கூறினோம். எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்காய் முடிந்தது. பட்டேல் கோஷ்டி மனம் போன போக்கிலே போக ஆரம்பித்துவிட்டது. அவர்கள் பலத்தை நம்பி பிரச்னைகளை தங்கள் இஷ்டத்தின் அச்சில் வார்க்கப் பார்க்கின்றனர். முடிவில் இந்திய சர்க்கார் கஷ்டங்களில் மாட்டிக்கொண்டு அதிலிருந்து வெளியேறுவதே சாத்தியமில்லாமல் ஆகப் போகிறது. நிஜாம் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருந்த நிபந்தனைகளே சமரசத்துக்குப் போதுமானவையாயிருந்தன. ஆனால் ஒரு அரசாங்கத்தின் எண்ணமே கெட்டவழியில் திரும்பியபிறகு அதை யார் தான் திருத்தமுடியும். இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டுமா அல்லது காஷ்மீர், ஹைதராபாத் வேண்டுமா என்று ஹைதராபாதை தாக்குவதற்குமுன் சிந்தித்து முடிவு செய்யும்படி நாம் போன இதழில் கேட்டிருந்தோம். இன்று இந்தியா ஹைதராபாதை தாக்கி ஒரு இடத்தில் 30 மைலும் இன்னொரு இடத்தில் 17 மைலும் முன்னேறிவிட்டது. இந்திய கலகத் தலைவர்கள் தங்கள் படைகளின் முன்னேற்றத்தையும் சமீபத்தில் வெற்றி தங்கள் கால்களை முத்தமிடுமென்றும் எண்ணி மகிழலாம். ஆனால் முன்னேறும் இந்திய சேனையின் ஒவ்வொரு அடியும் மரணத்தை நோக்கி வைக்கப்படுவதாகுமென்று இன்றைக்கும் எச்சரிக்கிறோம். காயமுற்ற புலிபோல் பாகிஸ்தான் ஆவேசங்கொண்டிருக்கிறது. நாளை என்ன நடக்குமென்று நம்மால் சொல்ல முடியாது. ஹைதராபாதை தாக்கியதன் மூலம் இந்தியா தேனீக்களின் கூட்டில் கையை விட்டுவிட்டது. தன்னுடைய தவறான போக்கின் பயங்கர விளைவுகள் இனித்தான் அதற்குத் தெரியவரும். 'ஜமீந்தார்' வெளியிட்ட செய்தியிலிருந்து காபினெட்டில் பண்டித நேரு, மௌலானா ஆஸாத், வல்லபபந்த், கித்வாய் நால்வரும் படையெடுப்பை ஆதரிக்கவில்லையென்றும் பட்டேல் கோஷ்டியின் முயற்சியால் படையெடுப்பு தவிர்க்க முடியாமல் போய்விட்டதென்றும் தெரிகிறது. சமரசத்துக்கு பதிலாக பட்டேல் யுத்தத்தில் இறங்கியிருக்கிறார். சிவில் சட்டமறுப்பில் பயிற்சியுள்ள பட்டேல் படையெடுப்பு என்றால் சட்டமறுப்பு போன்ற ஒரு தொழில் என்று நினைத்துவிட்டார். ஹைதராபாத்மீது படையெடுப்பு தற்கொலைக்குச் சமம் என்பதை ஒரு வாரம் அல்லது பத்து தினங்களில் அவருக்கு விளங்கிவிடும். அப்பொழுது வருந்துவதால் பிரயோஜனமேற்படப்போவதில்லை. சமூகங்கள், நாடுகளின் அழிவுக்குக்காரணமான மனிதர்களில் ஸர்தார் பட்டேலும் ஒருவர். ஹைதராபாத் தாக்கப்பட்ட பிறகு பாகிஸ்தான் மக்கள் 'யுத்தம், யுத்தம்' என்று முழங்குகின்றனர். 'யுத்தமா அதற்கும் தயார்' என்பதே அவர்களுடைய கோஷமாயிருக்கிறது."

---

"நாளை என்ன நடக்குமென்று நம்மால் சொல்ல முடியாது" என்று மனவேதனை அடைய வேண்டிய அவசியம் 'ஆஸாத்' ஆசிரியருக்கு இன்று இருக்காதென்பது நிச்சயம்

O O O

## 'டான்' பத்திரிகை சப்பைக்கட்டு

கராச்சி, செப் 20—

ஹைதராபாத் சரணாகதியை பாகிஸ்தான் பத்திரிகைகள் கடுமையாகக் கண்டித்து எழுதுகின்றன. 'டான்' பத்திரிகை பந்தோபஸ்து சபை மீது குற்றஞ்சாட்டுகிறது. "ஹைதராபாத் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த நெருக்கடியான சமயத்தில் பந்தோபஸ்து சபை அவசியமில்லாத வீண் வாதங்களில் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தது. படையெடுப்பாளரின் மீறிய பலத்தின் காரணமாக ஹைதராபாத் பணிய நேர்ந்தது. நிஜாம் சரணடைந்து எதிர்ப்பைக் கைவிட்டுவிடும்படி தன் படைகளுக்கு உத்திரவிடும்படியான நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது. மேலும் அப்பத்திரிகை இந்தியாமீது குற்றஞ்சாட்டி "இந்தியா ஆயுதபலத்தைக்கொண்டு ஹைதராபாதை பணிய வைத்திருக்கிறது. இனி ஹைதராபாத்தில் அமைக்கப்படும் சர்க்கார் பொதுஜனப் பிரதிநிதித்வம் வாய்ந்த சர்க்காராக இருக்காது." என்று எழுதியிருக்கிறது.

"ஹைதராபாத் பிரச்னை ஒருக்காலும் கைவிடப்படாமலிருக்க வேண்டும். பந்தோபஸ்து சபை ஹைதராபாத் பிரச்னையை அலட்சியம் செய்தால் பாகிஸ்தானுக்கு அதனிடம் நம்பிக்கையும் விஸ்வாஸமும் இல்லாமல் போய்விடும்" என்று 'டான்' பந்தோபஸ்து சபையை கோரியிருக்கிறது.

## 'மக்ரிபீ பாகிஸ்தான்' லாஹூர்

"ஹைதராபாத் மீது போர் தொடுக்கப்பட்டவுடன் லாஹூரிலுள்ள சில பத்திரிகைகள் சொந்த கற்பனைகளையும் தவறான செய்திகளையும் பிரசுரிக்கும் ஒரு போராட்டத்தையே ஆரம்பித்திருக்கின்றன. பொதுஜனங்களின் உணர்ச்சிக்கு ஏற்ற வகையில் பொய்யும் பிறட்டும் எழுதி பணம் சம்பாதிப்பதே இதன் நோக்கம்........... இன்று வெளியான பத்திரிகைகளில்கூட ஹைதராபாத் வீரர்கள் பீரார் வரையில் முன்னேறிவிட்டதாக ஒரு உர்தூ தினசரி பத்திரிகை எழுதுகின்றது. ஹைதராபாத் படைகள் கோவாவை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றன வென்று ஒரு ஆங்கில பத்திரிகை பிரசுரித்திருக்கிறது"

ஹைதராபாத் சரணாகதிக்குப் பிறகு இனி இந்த பத்திரிகைகள் என்ன எழுதப் போகின்றன என்பதை இனிதான் பார்க்கவேண்டும்.

● ● ●

## காயிதே ஆஜமின் வாரிசு யார்?

கராச்சி, செப் 16.—

மிஸ்டர் ஜின்னாவின் சொத்துக்கு யார் வாரிசு என்ற விஷயம் சமீபத்தில் வெளியாகும். அவருக்கு மூன்று சகோதரிகளும், ஒரு மகளும், ஒரு உடன் பிறந்த சகோதரனுடைய மகனும் இருக்கின்றனர். இரண்டு சகோதரிகளுக்கு கல்யாணமாகிவிட்டது. அவர்கள் பம்பாயிலிருக்கிறார்கள். கல்யாணமாகாத மூன்றாவது சகோதரியான மிஸ் பாதிமா ஜின்னா அவருடனேயே இருந்து வந்தார். சகோதரனுடைய மகனும் பம்பாயில் பாரிஸ்டராக இருக்கிறார். தன்னுடைய சொத்தில் மகளுக்கு உரிமையில்லை யென்று மிஸ்டர் ஜின்னா மறுத்திருக்கிறார். சொத்துரிமை மறுக்கப்பட்ட மகள்தான் துக்கத்தில் கலந்துகொண்டார். இரண்டு சகோதரிகளும் தம்பி மகனும் துக்கத்தில் கலந்து கொள்ளவில்லை

—'மிலிடரி கெஜட்' கராச்சி

○ ○ ○

## வாரிசில்லா அரசர்.

மிஸ்டர் ஜின்னாவின் மரணத்தைக்குறித்து எழுதுகையில் ஆங்கிலப் பத்திரிகையான 'பக்கிங்ஹாம் போஸ்ட்' "அவர் வாரிசில்லாத ஓர் அரசரைப்போலிருந்தார். அவருடைய மறைவுக்குப் பிறகு பாகிஸ்தான் என்ன கதியடையுமோ வென்று தெரியவில்லை." என்று கவலை தெரிவித்திருக்கிறது.

**நமது ஏஜெண்டுகள்**

**G. அப்துல் லத்தீப்,**
மணியக்காரத்தெரு, திருச்சி.

**பி. மீரா மொய்தீன்,**
ரெங்கோன் ஹால்,
காரைக்குடி

**M. S. M. கனி,**
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.

**WHOLE CEYLON AGENCY**
FOR
**"AZAD"**
**EMMEL & Co.,**
General Merchants & Commission Agents.
**GAMPOLA,** (CEYLON)

**'ஆஸாத்'**
பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.
ஏஜண்டு பெயர்:
**அப்துல் சலாம்,** ஈரோடு.

**வரவேற்கிறோம்.**
ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.
**மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.**

## ஆசிரியர் கடிதம்:—

ஆசிரியர் அவர்களே! அஸ்லாமு அலைக்கும்.

முஸ்லிம்கள் அனைவரும் காங்கிரஸில் சேர்ந்து விடவேண்டுமென்று யோஜனை கூறுகின்றீர்கள். காங்கிரஸில் சேருவதால் முஸ்லிம்களுக்கு விமோசனம் பிறக்குமென்று தெரியவில்லை. ஆயிரம் முறை விஸ்வாஸப் பிரமாணம் செய்தாலும் என்னதான் உள்ள சுத்தியுடன் உறுதியளித்தாலும் முஸ்லிம்களை நம்பத் தயாராய் இல்லை நாலரைகோடி இந்திய முஸ்லிம்கள் சுத்திசெய்துகொண்டாலும் கூட ஹிந்துக்கள் நம்பமாட்டார்கள் போலிருக்கிறது. இந்நிலையில் காங்கிரஸில் சேருவதால் முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாதென்பதே என் அபிப்பிராயம்.

தங்கள்,

முஹம்மது உசைன்.

———

அன்பரே!

முஸ்லிம்கள் எப்பொழுதாகிலும் ஹிந்துக்களை நம்பினார்களென்று தங்களால் சொல்ல முடியுமா? தங்கள் ஓட்டுக்களையும் பெற்று எந்த ஒரு ஹிந்துவும் பதவிக்கு வராமலிருக்க சதா தனித் தொகுதியையே முஸ்லிம்கள் வற்புறுத்தி வந்தனர் தனித்தொகுதி கோரிக்கை ஹிந்துக்களிடம் முஸ்லிம்கள் கொண்டிருந்த நம்பிக்கையின்மையையே காட்டுகிறது. தங்களுக்கென்று ஒருதனி ஸ்தாபனம் வைத்திருந்ததுடன் காங்கிரஸ் மஹாசபை முஸ்லிம்களின் பிரதிநிதித்வம் வாய்ந்த ஸ்தாபன மல்லவென்றும் வாதித்து வந்தனர். காங்கிரஸை முஸ்லிம்கள் நம்பவில்லை யென்பதையே இது காட்டுகின்றது. ஹிந்துக்களையோ அல்லது காங்கிரஸையோ முஸ்லிம்கள் நம்பியதில்லை.

தங்களுடைய ஒரு அங்குல நிலமும் இந்தியாவில் விட்டுவைக்க சம்மதிக்காமல்பிரித்துக்கொண்டார்கள். முஸ்லிம்களுக்கு ஹிந்துக்களிடமிருந்த நம்பிக்கையையா பாகிஸ்தான் காட்டுகிறது.? நம்பிக்கை இருந்திருந்தால் நாடு ஏன் பிரியவேண்டும்?

உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தபோது நீங்கள் ஹிந்துக்களை விரும்பினீர்களா? அதைப் போலவே இன்று அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவர்கள் உங்களை நம்பத் தயாராயில்லை. பரஸ்பர நம்பிக்கையும், அவ நம்பிக்கையும் இருதரப்பிலிருந்தே ஏற்படமுடியும். அன்று நீங்கள் நம்பவில்லை. இன்று ஹிந்துக்கள் நம்பவில்லை. எனவே நீங்கள் அவர்களை நம்புங்கள் அவர்களும் உங்களை நம்புவார்கள். நம்பிக்கை அந்தரங்க சுத்தியிலிருந்து பிறக்கின்றது. வாய் வார்த்தைகளல்ல. உள்ளுக்குள் பாகிஸ்தான் அல்லது காஷ்மீர் படையெடுப்பாளர்களிடம் அனுதாபம் இருக்குமானால் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

ஒத்துழையாமை இயக்கத்தில் முஸ்லிம்கள் ஒத்துழைத்தார்கள் தங்களுக்கு சம்மந்தமில்லாத கிலாபத்தைப் போன்ற முஸ்லிம்களின் மத சம்மந்தமான போராட்டத்தில் ஹிந்துக்கள் விசாலமனப்பான்மையுடன் முஸ்லிம்களுடன் தோளோடு தோள் நின்று போராடியதை தாங்கள் மறந்திருக்க முடியாது. முஸ்லிம்கள் ஹிந்துக்களை நம்பிய இந்த அத்தியாயம் இந்திய சரித்திரத்தின் பிரகாசமாய் காணக்கிடைக்கின்றது. தயவுசெய்து ஹிந்துக்கள்மீது குறைகூறுவதை விட்டு அவநம்பிக்கைக்கு காரணமென்ன? அதற்கு பரிகாரமென்ன? இந்த அவநம்பிக்கை சூழ்நிலையை எவ்வாறு சீர் செய்ய முடியும்? குறிப்பாக நிலையை செப்பனிட முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்? என்ற விஷயங்களில் கவனத்தை செலுத்தும்படி யோஜனை கூறுகிறேன்.

## இந்தியா பாகிஸ்தானிடையே — மதில்! —

### பாகிஸ்தான் பத்திரிகையின் நூதன யோசனை

லாஹூர், 9—9—48.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே 'ஸீக்பிரீட்' போன்ற அரண் அமைக்க வேண்டுமென்று நூதனமான ஒரு யோசனையை கிலாபத் பாகிஸ்தான் கட்சியின் வாரப் பத்திரிகையான 'கிலாபத் பாகிஸ்தான்' வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவுடன் எல்லாவித தொடர்புகளையும் துண்டித்துக்கொள்ளும்படி யோசனை கூறுகையில் மேற்கூறிய பத்திரிகை எழுதுவதாவது:—

"கராச்சி முதல் காஷ்மீர் வரை இருபதடி அகலத்தில் அகழியை வெட்டி அதையடுத்து ஐந்தடி அகலமும் இருபதடி உயரமுள்ள மதில்கட்டி அந்த மதிலுக்கு உள்ளடங்கி மூன்றடி அகலமும் இருபதடி உயரமுள்ள ஒரு மதில் அமைக்கவேண்டும். இரண்டு மதில்களுக்குமிடையே நூறடி அகலமுள்ள இடைவெளியை விட்டு லாஹூர், ஜீலம் முதலிய ஐந்தாறு முக்கிய இடங்களில் மட்டும் வாயில்கள் ஏற்படுத்தி வாயில்களுக்கு பெரிய கதவுகள் போட்டு பலமாக பாதுகாக்கப்படவேண்டும். மதில்களில் ஒவ்வொரு நூறடிக்கும் ராணுவ முகாம்களிருக்கவேண்டும். நம் ராணுவத்தினரைக் கொண்டு இந்த மதில்களை ஆறு மாதங்களில் கட்டி முடிக்கலாம், பிரதேச மக்களின் உதவியும் கிடைக்கும் பாகிஸ்தானின் இதர பிரதேசங்களிலிருந்தும் மதில்வேலையில் பங்கெடுக்க தொண்டர்கள் முறைவாரியாக வருவார்கள். ஆங்காங்கு மதிலில் போலீஸ் சவுக்கிகள் அமைக்கப்பட்டு விட்டால் எல்லை தாக்குதல்கள் தானிய கள்ள மார்க்கட், பாகிஸ்தானிலிருந்து விலையேறியபொருள்களின் வெளியேற்றம் இவைகளைத் தடுக்கமுடியும்."

# — உண்மை முஸ்லிம்களின் உறுதி. —

## மௌலானா அபுல்கலாம் ஆஸாத் (1913ல் எழுதியது).

—( கூ. அ. மௌலானா அப்துல் மஜீத் மொழி பெயர்ப்பு )—

உலகத்தில் தோல்விகளே வெற்றிக்குரிய அஸ்திவாரத்தை எபபொழுதும் பலப்படுத்தியிருக்கின்றன எதேச்சாதிகாரம், அநியாயம், நிர்ப்பந்தம் முதலியவைகள் எவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கே உணர்ச்சிகளும் அதிகரிக்கும்.

சிங்கம் அடிபட்டாலும், காயமுற்றாலும் தைரியத்தை இழந்து விடுவதில்லை. அதன் ஆவேசம் அதிகரிக்கவே செய்யும். ஆரம்பத்தில் ஏற்பட்ட அபஜெயத்தை முடிவில் தன் ஜெயத்துக்கு பீடிகையாக்கிக் கொள்ளும்.

வாயுவை சீசாவில் அடைத்து அழுத்த முயன்றால் அது அழுந்தப்படுவதற்குப் பதிலாய் சீசா உடைந்து போவதை கண்கூடாகப் பார்க்கின்றோம். விருக்ஷத்தின் கிளைகளை வெட்டித்துண்டு துண்டாக செய்து விடுகிறோம். சில தினங்கள் வரை அது விருக்ஷம் என்ற நாமத்தையும் இழந்து நிற்கின்றது ஆயினும் வஸந்த காலம் வந்தவுடன் தளிர்விட்டு, பசுமையாகி பூக்கவும், காய்க்கவும் தலைப்பட்டு விடுகின்றது.

சமுத்திரங்களை வசப்படுத்துவதற்கு எத்தனையோ முயற்சிகள் செய்யப்படுகின்றன. அலைகளின் மேல் கப்பல்கள் ஓட்டப்படுகின்றன. கப்பல்கள் சமுத்திர ஜலத்தைப் பிளந்துகொண்டு செல்லுகின்றன கப்பல்களுக்கு ஆபத்து வாராமல் தடுக்கும் பொருட்டு எத்தனையோ முன் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன ஆயினும் கப்பல்களுக்கு ஆபத்து வாராதென்று நிச்சயமாய்க் கூற எவராலும் சாத்தியப்படுமா?

சமூகம் முன்னேற்றமடைவதும் தாழ்த்தப்படுவதும் ஆச்சரியமான காரிய மல்ல சமுத்திரத்தில் அலைகள் உயர்வதும் தாழ்வதும் சகஜமாயிருப்பது போலவே, சமூகங்கள் ஒருகாலத்தில் கீர்த்தியையிழப்பதும் மற்றொரு காலத்தில் புகழைப் பெறுவதும் சர்வசாதாரணமாகும்.

இப்பொழுது நாம் சந்தேகமின்றி மிகப்பெரும் கேவலமான நிலைமையை அடைந்திருக்கின்றோம். நம்மை வெகு தூரம் அநீதியின் புயல்காற்று ஒதுக்கித் தள்ளிவிட்டது நம்முடைய புண்கள் அதிக ஆழமாகிவிட்டன. ஆயினும் இப்புண்கள் சௌகர்ய மடையமாட்டாவென்று எவரும் கருத நியாயமேயில்லை. கஷ்டங்கள் நிகழ்வதும் நஷ்டங்களின் வெள்ளம் வருவதுமாகியவைகளையே உலகமென்றறிவிக்கப்படுகின்றது. ஆதலின் உலகத்தில் அடுத்தடுத்து வரும் அலைகளை எதிர்க்கத் தைரியமுள்ளவர்களே உலகத்தில் ஜீவித்திருக்க முடியும். எத்தனை முயற்சிகள் பலிக்காவிடினும் முயற்சியை விடாது செய்து வரவேண்டும். ஒவ்வொரு அடியிலும் தடை ஏற்பட்டாலும் நடந்துகொண்டேயிருக்கவேண்டும். அடுத்தடுத்துக் கீழே விழுந்தாலும் ஒவ்வொரு தடவையும் எழுந்து நடக்க வேண்டும்.

“எஃகூப்பின்லைத்” என்பவர் ஒருவியாபாரத்தை ஆரம்பித்தார். அதனால் தனக்குப் பெருங்கீர்த்தி ஏற்படுமென்று கூறினார். அப்பொழுது ஜனங்கள் அவரைப் பார்த்து சிரித்தனர். ஜனங்கள் சிரிப்பதைக் கண்டு எஃகூப்பின்லைத் “என்னிடத்தில் பணமில்லை. தங்கம், வெள்ளி கிடையா; எனக்கு உதவி புரிகிறவர்களுமில்லை. தேசத்தைக் கைப்பற்றுவது, அதை ஆளுவது முதலிய விஷயங்களில் எனக்குப் பரிச்சயமேயில்லை. ஆயினும் “குராஸான்” தேசத்தைச் சேர்ந்த ஒரு பாமரனை அபூமுஸ்லிமாகச் செய்துவிட்ட ஹிருதயம் என்னிடத்தில் இல்லையா?” என்று கூறினார்.

‘பனீ உமய்யா’ வம்சத்தினரின் ஆட்சியை அகற்றி ‘பனீ அப்பாஸியா’ வம்சத்தினரை அதிகாரத்திலமர்த்த நடந்த கிளர்ச்சிக்குத் தலைவராயிருந்தவர் அபூமுஸ்லிம் குராஸானி. ஒரு முஸ்லிம் பெருங்கீர்த்திவாய்ந்த பெரிய அரசாங்கமொன்றை அமைக்க முடியுமாயின் தைரியமும் உறுதியுமுள்ள ஒவ்வொருவரும் எப்பெருங்காரியத்தையும் சாதிக்க முடியுமெனபதில் தனக்கு சந்தேகமில்லை யென்பதையே ‘எஃகூப்-பின்-லைத்’ சுட்டிக் காட்டினார். இவ்வித உறுதியும், உயரியநோக்கமும், தைரியமும், வீரமுமுள்ளவர்கள் தோற்றத்தில் படாடோப மற்றவர்களாயும் உலக ஆடம்பரங்கள் எதுவுமில்லாதவர்களாயு மிருந்தார்கள். ஆயினும் அவர்களுடைய வார்த்தைகள் உள்ளத்தின் உணர்ச்சியையும் “ஆண்டவனே பெரியவன்” என்னும் கருத்தையும் ஒலிக்கக் கூடியதாகவுமேயிருந்தன.

ஆண்டவனின் வாக்குறுதியில் நம்பிக்கையுள்ள ஹிருதயங்களிலிருந்து வெளியாகும் உணர்ச்சி ஆச்சரியமாகவேயிருக்கும். முடிவில் உண்மையாகவே வெளித்தோற்றத்தில் படாடோபம் எதுவுமில்லாத “எஃகூப்-பின்-லைத்” பர்ஷியா தேசத்தின் அரசராகிவிட்டார். அவரின் ஆட்சியை உலகத்திலுள்ள

# பாகிஸ்தானில் எதிர்ப்பு.

டாக்கா

ஹைதராபாத்தில் இந்தியாவின் போலீஸ் நடவடிக்கையை எதிர்த்து இங்கு மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். நகரத்தின் முக்கிய தெருக்களின் வழியே "ஹைதராபாத்தை காப்பாற்றுங்கள்" என்று கோஷித்துக்கொண்டு சென்ற ஊர்வலம் சர்க்கார் மாளிகையை அடைந்து கலைந்தது.

ഠ ഠ ഠ

மூல்தான்

இங்கு நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் மிஸ்டர் ஜின்னாவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன் இந்திய யூனியனிடமிருந்து ஹைதராபாத்தை காப்பாற்ற வேண்டுமென்றும் பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ഠ ഠ ഠ

லாஹூர் செப் 19—

ஹைதராபாதுக்கு உதவி செய்ய பாகிஸ்தானை தூண்டுவதற்கு இந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் நிஜாம் சர்க்கார் எதிர்ப்பைக் கைவிட்டு இந்திய கோரிக்கைகளுக்கு இணங்கிவிட்ட செய்தி ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தெரிந்தது. அவர்கள் மனமுடைந்து போயினர். அநேகர் செய்தியை நம்பவேயில்லை பத்திரிகைகளில் இச்செய்தி பிரசுரிக்கப்படுவதற்கு முன் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் யுனிவர்ஸிடி மைதானத்தில் கூடி ஹைதராபாத் விஷயத்தில் பாகிஸ்தானின் பலஹீனமான கொள்கையை கண்டித்துப் பேசி ஸைக்கிள் ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

ஹைதராபாத் சரணாகதி அடைந்த விஷயம் அப்பொழுது அவர்களுக்குத் தெரியாது. சர்க்கார் விடுதி, லாஹூரிலிருக்கும் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் வீடு இரண்டு இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது. திரும்பி வருகையில் சரணாகதி செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆச்சரியத்துடன் கலைந்து சென்றனர்.

ஹைதராபாத்துக்குப் பிறகு இந்திய சர்க்கார் காஷ்மீரில் தீவிரமான நடவடிக்கை எடுக்குமென்றும் பெருமளவில் ராணுவத்தினரை காஷ்மீர் அரங்கத்தில் கொண்டுவந்து குவிக்குமென்றும் இங்குள்ள அநேகர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆயினும் இனி இந்தியா பாகிஸ்தான் உறவின் புதிய சகாப்தம் ஆரம்பமாகலாம் என்ற அபிப்பிராயமும் சில வட்டாரங்களில் நிலவுகின்றது.

---

அரசாங்கங்கள் அசைக்க முடியவில்லை பர்ஷியா தேசத்து சரித்திரம் "எஃகூப்-பின்-லைத்" அவர்களின் கப்பீரமான ஆட்சிப் பெருமையை இன்றும் கூறிய வண்ணமாகவேயிருக்கின்றது,

1123-ம் வருஷம் ஸ்பெயினில் ஒரு முறை இஸ்லாமிய அரசாங்கம் ஒழிந்துபோயிருந்தது மஸ்ஜிதுகள் மதுபானம் உட்கொள்ளுமிடங்களாக்கப் பட்டிருந்தன. இஸ்லாமையும் இஸ்லாமின் நபியையும் இழிவுபடுத்தி கூத்து மேடைகளில் வேடிக்கைகள் காட்டப்பட்டன முஸ்லிம்களுக்குள்ள சுயேச்சை, சுயமதிப்பு, மரியாதை முதலிய வகைகளுள் எதுவுமில்லாமல் முஸ்லிம்கள் கேவலமாய் நடத்தப்பட்டனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஈமானும் நற்செய்கைகளும் குடிகொண்ட ஒரு பக்கீர் (முஹம்மதிபுனு அப்துல்லா) கீழ் தேசத்திலிருந்து புறப்பட்டு மேல் தேசமாகிய ஸ்பெயினுக்குச் சென்று தன்னந்தனியே ஜனங்களுக்கு உபதேசஞ்செய்தார். குர்ஆனைப் பின்பற்றும்படியாயும் நபி நாயகம் அவர்களின் செயல்களுக்கு புத்துயிரளிக்கும்படியாயும் ஜனங்களுக்கு அறிவுறுத்தினர். அவர் சத்தியப் பிரசாரஞ் செய்யுங்காலை அவரோடு அவரின் சிருஷ்யரான, "அப்துல் மூமுன்" என்னும் ஒருவரேயிருந்தார். சத்தியப் பிரசாரம் புரிகிறவர்களுக்கு உதவியாய்ப் பலரிருக்க வேண்டியதவசியமில்லை. ஆதலின் முஹம்மதிபுனு அப்துல்லா அவர்கள் தன்னந்தனியே செய்த முயற்சியால் சிலவருஷங்களுக்குள் ஸ்பெயினில் மறுமுறை இஸ்லாமிய அரசாங்கம் ஏற்பட்டுவிட்டது.

ஆண்டவனுக்கும் அவனுடைய ரசூலுக்கும் நம்பிக்கையுள்ளவர்களுக்குமே மரியாதையுண்டென்னும் திருமறையில் நம்பிக்கையுள்ளவர்களாகவும், உண்மையான ஈமானுக்குரிய காரியங்களைச் செய்கிறவர்களாயும், நாமிழந்துவிட்ட இஸ்லாமிய கீர்த்தியைத் திரும்பவும் அடைவதற்குண்மையான வழியில் முயற்சி செய்கிறவர்களாயும் ஏற்பட்டுவிடுவோமாயின், நமக்கு ஆண்டவன் அளவற்ற உதவியைப் புரிவானென்பது திண்ணம். ஆகவே சத்தியத்தையும் நீதியையும் அழித்துக்கொடிருக்கும் அகங்காரமுள்ள தீய சக்திகளை நாம் முறியடித்துவிடலாம்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.